# ஆசிரியர்களுக்கான வழிமுறைகள்

## பைபிள் டைம் லெவெல் 1 மற்றும் 2

**B** தொடர்

பாடங்கள் 1 - 6

www.besweb.com

# ஆசிரியர்களுக்கான வழிமுறைகள்

பைபிள் டைம் பாடங்கள் முதன் முதலில் அஞ்சல் வழி கல்வியாகவே அறிமுகம் செய்யப்பட்டாலும், அஞ்சல் வசதியில்லாத பகுதிகளில் இந்த பாடங்கள் அதிகமாய் பயன்படுத்தப்படுவதால் அஞ்சல் வழியிலேயே இப்பாடங்களை கற்றுத்தருவதில் அநேக சிக்கல்கள் உள்ளன. விசேஷமாக ஆப்பிரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் உள்ள சபைகளில் மற்றும் பள்ளிகளில் இந்த சிரமம் உள்ளது. எனவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பயன்படுத்துவதற்காக இந்த ஆசிரியருக்கான வழிமுறைகள் உருவாக்கப்படுகிறது. இந்த புத்தகத்தில் உள்ள ஆசிரியருக்கான வழிமுறைகள் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை பாடங்களுக்கானவை, அதாவது வயது 5-10 வரை உள்ள பிள்ளைகளுக்கானவை.

பைபிள் டைம் பாடங்களில் உபயோகப்படுத்தப்படும் அதே வேதாகம பகுதியே இந்த ஆசிரியர் கையேட்டிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த பாடங்கள் வாராந்திர அடிப்படையில் பயன்படுத்தப்பட வேண்டியவை. ஏப்ரல் மாத பாடங்கள் ஈஸ்டரை பற்றியும், டிசம்பர் மாத பாடங்கள் கிறிஸ்துமஸ் பற்றியும் இருக்கும்.

சில பகுதிகளில் வாராந்திர பாடங்கள் **A** 4 லும் சில பகுதிகளில் **A** 5 புத்தகத்தில் 24 பாடங்களும் கொடுக்கப்படும். பொதுவாக ஆசிரியர் சபையிலோ அல்லது பள்ளியிலோ வைத்து ஒரு பாடத்தைக் கொடுப்பார், அது வீட்டுக்கு எடுத்து செல்லப்பட்டு மறுவாரம் திரும்ப கொடுக்கப்படும். அந்த மாத முடிவில் எல்லா பாடங்களும் திரும்ப பெறப்பட்டு ஆசிரியரால் திருத்தப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும், பின்னர் திரும்ப மாணவர்களிடம் கொடுக்கப்படும்.

புத்தகங்கள் சரியாக பயன்படுத்தப்பட்டால், ஒவ்வொரு வகுப்பு நேரம் முடிந்தவுடன், புத்தகங்கள் திரும்ப பெறப்பட்டு மதிப்பெண் கொடுக்கப்படும். பல நேரங்களில் அது சாத்தியப்படாது, எனவே அப்படிப்பட்ட நேரங்களில் மாணவர்களிடம் புத்தகங்கள் மாற்றி கொடுக்கப்பட்டு ஒவ்வொருவரும் தங்கள் நண்பனின் புத்தகத்தை திருத்தி மதிப்பெண் இடுவதற்கான இடம் உண்டு, மற்றும் மாணவரின் முன்னேற்றத்தைப் பற்றி குறிப்பு எழுதும் இடமும் உண்டு, புத்தகத்தின் கடைசியிலே 6 மாத கால மதிப்பெண் சதவீதத்தைக் குறிக்கவும் மாணவருக்குக் கொடுக்கும் படியான ஒரு சான்றிதழும் உண்டு.

## ஆசிரியருக்கான ஆயத்தம்

ஆசிரியருக்கு எந்த ஒரு சுதந்திரமுமில்லாமல் அவர்களுடையகருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் இருக்க எங்களுக்கு மனதில்லை. கீழ்க்காணும் குறிப்புகள் பைபிள் டைம் புத்தகங்களை அதிக ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த உதவும்.

கதையை நன்றாக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்: வேதாகம கதையையும் பைபிள் டைம் பாடத்தையும் ஆசிரியர்கள் நன்றாக அறிந்திருக்க வேண்டும். பாடங்களை கற்றுக்கொடுக்கும் முன்னரே பாடங்களை ஆசிரியர்கள் செய்து முடித்திருக்க வேண்டும், பாடங்களை ஆயத்தம் செய்யும் போது வழிமுறைகளையும் கருத்தில் கொள்ளுதல் அவசியம்.

கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை புரிந்து கொள்ள வேண்டும்: ஒவ்வொரு பாடத்திட்டத்தின் ஆரம்பத்தில் “நாம் கற்றுக்கொள்வது” என்கிற ஒரு பகுதி உண்டு அதன் கீழ் 2 குறிப்புகள் உண்டு. இவைகள் தான் பிள்ளைகள் அன்றைய நாளில் ஆசிரியர் பாடத்தை எடுத்து முடித்த பின்பும், பாடப்புத்தக வேலையை செய்து முடித்த பின்பும் மாணவர்கள் கற்றுக்கொள்ள போகிற விசயங்கள். முதல் குறிப்பு பிள்ளைகள் பாடத்தை புரிந்துகொள்ள உதவும், இரண்டாம் குறிப்போ பிள்ளைகளை சிந்திக்கச்செய்வதும், பின்னர் அதை கடைபிடிக்கவும் தீர்மானம் எடுக்கவும் உதவும். இந்த குறிப்புகள் அன்றைய நாளில் கற்றுக்கொடுக்கும் முக்கிய சத்தியத்தின் சிறு குறிப்புகளேயாகும். ஆசிரியர்களும் இந்த குறிப்புகளை தங்கள் தனிப்பட்ட வாழ்வில் ஓப்பிட்டு சிந்தித்துப் பார்க்கலாம்.

**அறிமுகப்படுத்தவும்:** ஒவ்வொரு பாடத்திலும் பிள்ளைகள் அந்த சூழ்நிலையில் இருக்கும் போது அவர்களின் அனுபவங்கள் எப்படியிருக்குமோ அதை வைத்தே பாடங்கள் துவக்கப்படும். பாடங்களை துவக்க பிள்ளைகளோடு கலந்து ஆலோசிக்க சில கருத்துக்களை நாங்கள் கொடுத்துள்ளோம்.

**கற்றுக்கொடுக்கவும்:** ஒவ்வொரு கதையிலும் முக்கிய புள்ளிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த கதைகளை கற்றுக்கொடுக்கும் போது அதை ரசிக்கும் விதமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் கற்றுக்கொடுக்கவும் மற்றும் இந்த புத்தகத்தை பிள்ளைகள் முன்பாக திறந்து பார்க்காமல் முன்னதாகவே கதையை நன்கு அறிந்து போதிக்கவும் வேண்டும் என நாங்கள் எதிர்ப்பார்க்கிறோம். பிள்ளைகள் கதையின் முக்கிய பாடத்தை நன்கு கற்றுக்கொண்டு தாங்கள் எடுக்க வேண்டிய தீர்மானத்தை நன்கு புரிந்து எடுக்க ஆசிரியர்கள் வாஞ்சிக்க வேண்டும். தேவைக்கு ஏற்றார் போல சில விளக்கங்களை நாங்கள் கொடுக்க முயற்சித்திருக்கிறோம். அவை இட்டாலிக்ஸ் வடிவிலே இருக்கும்.

**கற்றுக்கொள்ளவும்:** ஒவ்வொரு கதைக்கும் ஒரு முக்கிய வசனம் உண்டு. சில சமயங்களில் இரண்டு வசனங்களும் இருக்கும். மற்றொரு வசனம் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் அவை எப்பொழுதும் எளிமையாக கற்றுக்கொள்ளுகிற அளவிற்கே இருக்கும். வேதாகம முக்கிய வசனங்களை பிள்ளைகள் கற்றுக்கொள்ளும் அறிவிலே வளர்வதற்கு முக்கிய வசனங்களை அடிக்கடி ஞாபகப்படுத்துதல் அவசியம் என நாங்கள் நம்புகிறோம்.

**செய்து முடிக்கவும்:** ஒரு பள்ளியாக இருக்கும் பட்சத்தில், பிள்ளைகளுக்கு பாடத்தாள்களை செய்துமுடிக்கும் திறன் எவ்வளவு உண்டு என்பதையும், ஆசிரியர்களுடைய ஒத்துழைப்பு எவ்வளவு தேவை என்பதையும் நன்கு அறிந்து கொள்ள முடியும். ஆனால், சில இடங்களில் ஆசிரியர் பாடப்பகுதியை சத்தமாக வாசிக்க வேண்டிய அவசியம் ஏற்படலாம். சில பிள்ளைகள் தாங்களாகவே வாசித்துக்கொள்வார்கள். எவ்வித சூழ்நிலையானாலும் சரி, பிள்ளைகளின் கவனத்தை கட்டுக்குள் வைக்கவும், கேள்விகளை பற்றியக் குறிப்புகளை கவனிக்கவும் இதை செய்யலாம். பள்ளிகூடம் அல்லாத சூழ்நிலையிலே நீங்கள் பைபிள் டைமை பயன்படுத்துபவராயிருந்தால், நீங்கள் பிள்ளைகளோடிருந்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், மற்றும் பாடங்களை செய்து முடிக்கும் போது மாணவர்களுக்கு அது சுமையாக இல்லாமல், தேர்வு போல இல்லாமல் சுவாரஸ்யமாக இருக்கும்படி செய்ய வேண்டும்.

**நினைவில் கொள்ளவும்:** எங்கெல்லாம் முடிகிறதோ அங்கெல்லாம், கேள்வி பதில்கள் மூலமாகவும், நடித்து காட்டுதல் மூலமாகவும், பாடங்களை நன்கு கற்றுக்கொள்ளவும், நினைவில் கொள்ளவும் உதவி செய்ய முயற்சி செய்திருக்கிறோம்.

## முக்கிய வசனங்களைக் கற்றுக்கொடுத்தல்:

கற்றுக்கொடுக்கப்படும் வசனத்தை ஒரு தாளிலோ அல்லது போர்டிலோ சில வார்த்தைகளை தவிர்த்து எழுத வேண்டும். பிள்ளைகள் வசனத்தை மீண்டும் மீண்டும் வாசிக்க செய்ய வேண்டும். அவர்கள் சொல்ல சொல்ல மீதி வார்த்தைகளை அழிக்க வேண்டும். கடைசியிலே எல்லா வார்த்தைகளையும் அழித்து முடிவதற்குள் பிள்ளைகள் முழு வசனத்தையும் கற்றுக்கொள்வார்கள்.

## முக்கிய வசனத்தைக் கற்றுக்கொடுக்க,

a) ஹெங்க்மேன் விளையாட்டை போல, வசனங்களின் எழுத்துக்களுக்கு பதிலாக கோடிட்ட இடம் இட வேண்டும். அந்த வசனத்தில் எழுத்துக்களை கீழே எழுத வேண்டும். பிள்ளைகள் கோடிட்ட இடத்திற்கு பொருத்தமான வார்த்தைகளை கவனித்து எழுத வேண்டும்.

b) வேதாகமத்தை பிள்ளைகள் கையில் கொடுத்து சொல்லும் வசனத்தை அவர்கள் கண்டுபிடித்து வாசிக்க செய்ய வேண்டும்.

## காலத்திட்டம்:

பாட ஒழுங்கு: ஒவ்வொரு பாடத்திற்கும் பாடம் நடத்தும் ஒழுங்கை நாங்கள் தீர்மானித்துள்ளோம், ஆனாலும் ஆசிரியர்கள் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்றார்போல் அதை மாற்றிக்கொள்ளலாம்.

முன்னுரையும், கதை கூறுதலும் - ஏறக்குறைய 15 நிமிடங்கள் முக்கிய வசனம் கற்றுக்கொடுத்தல் - 5-10 நிமிடங்கள் பாடத்தாள் வேலையை முடித்தல் - 20 நிமிடங்கள் வினா விடை மற்றும் இதர வேலைகள் - 5-10 நிமிடங்கள்

இந்த முக்கிய வாசகத்தை ஞாபகம் வைக்கவும்.

"சொல்லுங்கள் ஒருவேளை மறந்துவிடுவேன்
காட்டுங்கள் அதை நான் ஞாபகம் கொள்வேன்
செய்ய வையுங்கள் நான் புரிந்துகொள்வேன்"

## பைபிள்டைம் பாடத்திட்டம்

| | நிலை 0 (பள்ளி செல்லுமுன்)<br>நிலை 1 (வயது 1-7)<br>நிலை 2 (வயது 8-10) | நிலை 3 (வயது 11-13) | நிலை 4 (வயது 14+) |
|---|---|---|---|
| தொடக்க பாடங்கள் | 1.தொடக்கபாடம்-அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி | 1.தொடக்க பாடம் - அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி | 1.தொடக்க பாடம் - அறிமுகம்<br>2.**U**1லூக்கா நற்செய்தி<br>3.**U**2லூக்கா நற்செய்தி<br>4.**U**2 லூக்கா நற்செய்தி |
| A தொடர் | 1. படைப்பு<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. ஆபிரகாம்<br>6. ஆபிரகாம்<br>7. பேதுரு<br>8. பேதுரு<br>9. யாக்கோபு<br>10. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. படைப்பு<br>2. நோவா<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. ஜெபம்<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. படைப்பு & வீழ்ச்சி<br>2. ஆதியாகமம்<br>3. பேதுரு<br>4. பேதுரு - சிலுவை<br>5. பேதுரு<br>6. ஆபிரகாம்<br>7. யாக்கோபு<br>8. கிறிஸ்தவ வாழ்க்கை<br>9. பவுல்<br>10. பவுல்<br>11. பவுல்<br>12. கிறிஸ்துமஸ் கதை |
| B தொடர் | 1. கிறிஸ்துவின்ஆரம்பகால வாழ்க்கை<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானி<br>4. சிலுவை<br>5. உவமைகள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. இயேசு சந்தித்த மக்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானி<br>4. சிலுவை<br>5. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>6. யோசேப்பு<br>7. யோசேப்பு<br>8. நற்செய்தி எழுத்தாளர்கள்<br>9. மோசே<br>10. மோசே<br>11. மோசே<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. உவமைகள்<br>2. அற்புதங்கள்<br>3. பெத்தானி<br>4. சிலுவை<br>5. ஆரம்பகால கிறிஸ்தவர்கள்<br>6. யாக்கோபு & அவரது குடும்பம்<br>7. யோசேப்பு<br>8. அப்போஸ்தலர் 2:42 - முன்னே உள்ள வழி<br>9. மோசே<br>10. மோசே<br>11. சட்டம்<br>12.கிறிஸ்துமஸ் கதை |
| C தொடர் | 1. தானியேல்<br>2. தொடரும் அற்புதங்கள்<br>3. இயேசு சந்தித்த மக்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத் & சாமுவேல்<br>6. தாவீது<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. யோனா<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசு சந்தித்த மக்கள்<br>3. தொடரும் அற்புதங்கள்<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. தேவன் பயன்படுத்திய மனிதர்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை | 1. தானியேல்<br>2. இயேசுவின் கூற்றுகள்<br>3. கர்த்தருடைய வல்லமை<br>4. கிறிஸ்துவின் மரணம்<br>5. ரூத்<br>6. சாமுவேல்<br>7. தாவீது<br>8. யோசுவா<br>9. எலியா<br>10. எலிசா<br>11. மேலும் பழைய ஏற்பாட்டு கதாபாத்திரங்கள்<br>12. கிறிஸ்துமஸ் கதை |

B 1 கதை 1

மரியாளும் யோசேப்பும் ஆலயத்தில் - தேவனுடைய குமாரனுக்காக தேவனுக்கு "நன்றி" கூறுவதைப் பற்றியதே இந்தக் கதை.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* குழந்தை இயேசு தேவனுடைய இரட்சிப்பாக பிறந்தார்.<br>* தம்முடைய குமாரனை நம்முடைய இரட்சகராகக் கொடுத்ததற்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.<br><br>**முக்கிய வசனம்: லூக்கா 2: 30**<br>**வேத பாகம்: லூக்கா 2: 22 - 38** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பரிசுகளைப் பெறுவதைப் பற்றி பேசுங்கள்; "நன்றி" என்று சொல்வதற்கு மாதிரியாக ஒன்று அல்லது இரண்டு சிறிய பரிசுகளை வழங்குவதற்காக பொதிந்துவைத்திருங்கள். குழந்தைகளிடம் அவர்கள் பெற்ற பரிசு ஏதாவது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்ததா எனக் கேட்டு அதன் பெயரைக் கூறும்படி கேளுங்கள். பரிசு சிறியதோ அல்லது பெரியதோ, எந்தவொரு பரிசுக்கும் "நன்றி" என்று சொல்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள். இன்றைய கதையில், தேவனுடைய மிகப் பெரிய பரிசான கர்த்தரா-கிய இயேசுவுக்காக நன்றி செலுத்தியவர்களை நாம் சந்திக்கிறோம். |
| **கற்றுக்கொடுங்கள்** | * மரியாள் மற்றும் யோசேப்புக்கு இன்று ஒரு சிறப்பு நாள். தேவனுக்கு நன்றி சொல்ல அவர்கள் குழந்தை இயேசுவை எருசலேமில் உள்ள ஆலயத்திற்கு அழைத்துவந்தனர். **(லூக்கா 2: 22 - 24)**<br>* அவர்கள் அங்கு சென்றடைந்தபோது,சிமியோன் என்ற ஒரு முதியவர் வந்தார். ஒரு இரட்சகரை அனுப்பும் தேவனுடைய திட்டத்தைப் பற்றி அவர் அறிந்திருந்தார் - உண்மையில் இயேசுவை காணும் வரை அவர் இறக்க மாட்டார் என்ற அற்புதமான வாக்குறுதி அவருக்கு வழங்கப்பட்டது. இந்த நாளில் மரியாளையும் யோசேப்பையும் சந்திக்கும்படி பரிசுத்த ஆவியானவர் சிமியோனை வழிநடத்தியிருந்தார்! முழு உலகத்திற்கும் இந்தச் சிறப்பு குழந்தை என்ன வித்தியாசத்தை ஏற்படுத்தும் என்று சிமியோன் அறிந்திருந்தார். எவ்வளவு அருமையான பரிசு இயேசு என்பதை அவர் அறிந்திருந்தார். சிமியோன் அந்தக் குழந்தையை தனது கைகளில் எடுத்து தேவனுக்கு நன்றிசெலுத்தியபோது அவருடைய உள்ள உணர்வுகள் எப்படியிருந்திருக்கும் என ஆராய்ந்துபாருங்கள். **(லூக்கா 2: 25 - 35)**<br>* அன்னாள் என்ற ஒரு வயதான மூதாட்டி மரியாளும் யோசேப்பும் குழந்தை இயேசுவோடு இருப்பதைப் பார்த்தாள். அவளும் தேவனுக்கு நன்றிகூறினாள். பின்னர் அவள் தான் சந்தித்த அனைவரிடமும் இயேசுவைப் பற்றி பேசினாள். **(லூக்கா 2: 36 - 38)** அன்னாளைப் போலவே, நாமும் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்ப வேண்டும்!<br><br>தேவாலயத்தில் "நன்றி" என்று எத்தனை பேர் சொன்னார்கள்? நான்கு பேரை நமக்குத் தெரியும் (அவர்களின் பெயர்களை ஞாபகத்துக்குக் கொண்டுவாருங்கள்) ஆனால் உண்மையில் இன்னும் அநேகர் அங்கிருந்தனர்!<br><br>நாமும் கர்த்தராகிய இயேசுவுக்காக தேவனுக்கு நன்றிசெலுத்துவது முக்கியம். சிமியோன் எப்போதும் இயேசு பிறக்கும் நாளை எதிர்பார்த்து வாழ்ந்துகொண்டிருந்தார். நாமும் திரும்பிப் பார்த்து இயேசுவின் பிறப்புக்கும், அவர் நம்முடைய பாவங்களுக்கு சிலுவையில் மரித்ததின் மூலம் நம்முடைய இரட்சகராக ஆனார் என்பதற்கும் நன்றிசொல்லுவோம். தேவனுடைய அற்புதமான பரிசின் மதிப்பை அங்கீகரிக்க குழந்தைகளை ஊக்குவியுங்கள். பிற பரிசுகளுடன் ஒப்பிடுகையில் தேவனுடைய அற்புதமான பரிசு எவ்வளவு விலையேறப்பெற்றது என உணர்ந்து, கர்த்தராகிய இயேசுவுக்காகவும் அவர் நமக்காகச் செய்த அனைத்திற்காகவும் தனிப்பட்ட முறையில் தேவனுக்கு நன்றிதெரிவிக்க ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்துங்கள். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | தேவையான இடங்களில் முக்கிய வசனத்தை **கற்றுக்கொடுத்து** விளக்கவும். **லூக்கா 2: 30.** இந்த வார்த்தைகள் சிமியோனின் "நன்றி" ஜெபத்தின் ஒரு பகுதி என்பதை விளக்குங்கள். கர்த்தராகிய இயேசு நம்முடைய பாவத்தைப் போக்கும்போது நமக்குத் தருவதே இரட்சிப்பு ஆகும். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* தேவாலயம் எங்கே இருந்தது?<br>* மரியாளும் யோசேப்பும் இயேசுவோடு ஏன் இருந்தார்கள்?<br>* அவர்களிடம் வந்த முதியவர் யார்?<br>* சிமியோனுக்கு என்ன வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தது?<br>* இயேசுவுக்கு நன்றி செலுத்திய வயதான மூதாட்டி யார்?<br>* குழந்தை இயேசுவை தானே பார்த்த பிறகு அன்னாள் என்ன செய்தாள்?<br>* சிமியோன் மற்றும் அன்னாளின் உதாரணத்திலிருந்து என்ன கற்றுக்கொள்ளலாம்?<br>* சிமியோன் மற்றும் அன்னாளைப் பற்றி பைபிளில் எந்தபு த்தகத்தில் படிக்கிறோம்? |

B 1 கதை 2

நாசரேத்தில் வளர்தல் - இந்தக் கதை இயேசு சிறுவனாக வளர்ந்து வருவதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* ஒரு சிறுவனாக, இயேசு தான் தேவனுடைய மகன் என்பதைக் காட்டினார்.<br>* கீழ்ப்படிதல் என்ற இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றுவது முக்கியம்.<br><br>**முக்கிய வசனம்: லூக்கா 2: 40**<br>**வேத பாகம்: லூக்கா 2: 39 - 52** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | உங்கள் பெற்றோரிடமிருந்து தொலைந்து போனது அல்லது பிரிக்கப்பட்ட அனுபவத்தைப் பற்றி பேசுங்கள். அது எப்படி / எங்கே நடந்தது? பெற்றோர் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்ற விவாதத்தில் கவனம் செலுத்துங்கள்.<br><br><u>அல்லது</u><br>பொருத்தமாக இருந்தால், வீட்டை விட்டு பயணம்செய்த அனுபவம் மற்றும் அது சம்பந்தப்பட்ட அனைத்து ஆச்சரியங்களையும் குறித்துப் பேசுங்கள். இன்றைய கதையில் மரியாளும் யோசேப்பும் இயேசுவை வீட்டிலிருந்து ஒரு சிறப்பு விழாவிற்கு அழைத்துச் சென்றார்கள் என்பதை விளக்குங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * பஸ்கா பண்டிகையை கொண்டாட இயேசு தனது பெற்றோருடன் எருசலேமில் இருந்தார். (வேத அறிவுள்ள வயதான குழந்தைகளுக்கு, இது எதைக் குறிக்கிறது என்பதை சுட்டிக்காட்டவும்.) இந்த சம்பவத்தோடு ஒப்பிட்டு (எருசலேமிலிருந்து நாசரேத்துக்கு 70 மைல்) தூரம் பற்றிய கருத்தை குழந்தைகளுக்கு எடுத்துரையுங்கள். உள்ளூர் தூரம், மற்றும் அவர்கள் எவ்வாறு நடைப்பயணமாகவே சென்றார்கள் என்பதை விளக்குங்கள். 12 வயதாக இருந்த இயேசுவுக்கு - மக்கள்கூட்டம், அவருடைய நண்பர்கள், கட்டிடங்கள் மற்றும் அவருடைய பிதாவாகிய தேவனைப் பற்றி போதகர்கள் ஆலயத்தில் பேசிய தருணம் ஆகியவை எவ்வளவு உற்சாகமாக இருக்கும் என்பதைப் பற்றி கலந்துரையாடுங்கள். **(லூக்கா 2: 42)**<br>* முதல் நாள் பயணத்தின் முடிவில் வீட்டில் சென்றுசேர்ந்த மரியாளும் யோசேப்பும் இயேசுவைக் காணவில்லை என்பதால் அவர் தொலைந்துபோனதை உணர்ந்தார்கள், மக்கள்கூட்டத்திற்கு மத்தியில் அவரை எப்படித் தேடியிருப்பார்கள் என்று கற்பனைசெய்து பாருங்கள், அவரைத் தேடியும் காணாமல் மீண்டும் எருசலேமுக்கு செல்ல முடிவு செய்தபோது அவர்களுடைய உணர்வுகள் எப்படியிருந்திருக்கும் என யோசித்துப்பாருங்கள். **(லூக்கா 2: 43 - 45)**<br>* மூன்று நாட்களுக்குப் பிறகு அவர்கள் தேவாலயத்தில் இயேசுவை போதகர்களிடையே அமர்ந்திருக்கக் கண்டார்கள். அவர்கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர், இத்துடன் இதைப்போன்ற ஒரு சம்பவத்தை எடுத்துக்கூறி அறிமுகப்படுத்துங்கள். அவர் கேட்ட கேள்விகளால்,தேவனைப் பற்றி அவருக்கு எவ்வளவு தெரிந்திருக்கிறது என்று போதகர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். மரியாளும் யோசேப்பும் ஆச்சரியப்பட்டார்கள்! மரியாளுக்கும் இயேசுவுக்கும் இடையிலான உரையாடலைப் பற்றிச் சொல்லுங்கள், இப்போது ஒரு சிறுவனாக இருந்தபோதும், இயேசு தனது தந்தையின் வேலையை அவருடைய வீட்டில் (தேவாலயத்தில்) செய்து கொண்டிருந்தார் என்பதை விளக்குங்கள். இயேசு சொல்வதை முழுமையாக புரிந்துகொள்வது மரியாளுக்கும் யோசேப்புக்கும் கடினமாக இருந்தது. **(லூக்கா 2: 46 - 50)**<br>* இதற்குப் பிறகு, இயேசு மரியாளுடனும் யோசேப்புடனும் நாசரேத்துக்குத் திரும்பினார். அவர் எல்லா வகையிலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அவர்களுக்கும் அவருடைய பிதாவாகிய தேவனுக்கும் பிரியமாக நடந்துகொண்டார். நாம் நம் பெற்றோருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று பைபிள் சொல்கிறது. **(எபேசியர் 6: 1)** |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | தேவையான இடங்களில் முக்கிய வசனத்தை கற்றுக்கொடுத்து விளக்கவும். லூக்கா 2: 40.<br>இயேசு வளர்ந்த பல்வேறு வழிகளை அது குறிப்பிடுகிறது என்பதை விளக்குங்கள். நாமும் இந்த வழிகளில் வளர முடியும் - எல்லாவற்றிற்கும் மேலாக, அவரை நேசிக்கும் மற்றும் சேவை செய்யும் மக்களாக நாம் வளர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். |
| **நினைவில்வையுங்கள்** | வினாடி வினா புதிருக்குப் பதிலாக இந்த சரியா ∴ தவறா வாக்கியங்களைப் பயன்படுத்தவும்.<br>* பஸ்கா பண்டிகை எருசலேமில் நடந்தது.<br>* இந்தக் கதையில் இயேசுவுக்கு 10 வயது.<br>* மரியாளும் யோசேப்பும் ஒரு நாள் கழித்து இயேசுவைக் கண்டுபிடித்தார்கள்.<br>* ஒரு உறவினரின் வீட்டில் இயேசு இருந்தார்.<br>* அவர்கள் கவலைப்படுவதாக மரியாள் இயேசுவிடம் கூறினாள்.<br>* இயேசு தனது தந்தையின் வேலையைச் செய்து கொண்டிருந்தார்.<br>* இயேசுவின் தந்தை தேவன்.<br>* இயேசு மீண்டும் நாசரேத்துக்குச் சென்று மரியாளுக்கும் யோசேப்புக்கும் கீழ்ப்படிந்திருந்தார். |

B 1 கதை 3

யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்றார் - இந்தக் கதை இயேசு யோவானால் ஞானஸ்நானம் பெற்றதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* இயேசுவின் வாழ்க்கையில் பாவமில்லை, அது எப்போதும் அவருடைய பிதாளுக்குப் பிரியமாயிருந்தது.<br>* நாம் பாவிகள், நாம் நம்முடைய பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும்.<br>**முக்கிய வசனம்: லூக்கா 3: 22**<br>**வேத பாகம்: லூக்கா 3: 1 - 22** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | கூட்டத்தைக் கூட்டும் நபர்களைப் பற்றி பேசுங்கள் - எ.கா. ஒரு அரசு பார்வையாளர், ஒரு ஜனாதிபதி, ஒரு பிரதமர், ஒரு சந்தையில் பொருட்களை விற்கும் நபர், தெருவில் வேடிக்கை காட்டுபவர். எல்லோரும் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க விரும்புகிறார்கள் அல்லது பேசுவதைக் கேட்க விரும்புகிறார்கள். யோவான் யோர்தான் நதிக்கு அருகில் பிரசங்கிக்க ஆரம்பித்தபோதும் அப்படித்தான் இருந்தது. பாலைவனத்தில் வசித்து வந்த இந்த விசித்திரமான மனிதன் என்ன சொல்கிறான் என்று கேட்க ஒரு கூட்டம் கூடியது. **(மத்தேயு 3:4)** |
| **கற்றுக்கொடுங்கள்** | * யோவான் ஒரு தீர்க்கதரிசி ஆவார். இதன் பொருள் யோவான் தேவனிடமிருந்து ஒரு முக்கியமான செய்தியை பெற்றிருந்தார். அவர்கள் பாவிகள் என்றும் அவர்கள் செய்த தவறான காரியங்களுக்கு மனம் வருந்த வேண்டும் என்றும் மேலும் அவற்றைச் செய்வதை நிறுத்த வேண்டும் என்றும் அவர் மக்களிடம் கூறினார். அதன் பின்னர் அவர்களுக்கு யோர்தான் நதியில் முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. அவர்கள் உண்மையிலேயே தங்கள் வழிகளை மாற்றிக்கொள்ள விரும்புகிறார்கள் என்பதை இது காட்டுகிறது. **(லூக்கா 3: 2,3,7)** குழந்தைகள் ஒரு கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைப் பார்த்திருந்தால், இதை அவர்களின் அனுபவத்துடன் சம்பந்தப்படுத்திப்பாருங்கள். நாம் செய்த தவறான செயல்களுக்காக நாம் அனைவரும் வருந்தவேண்டும் (மனந்திரும்ப வேண்டும்) என்பதை விளக்குங்கள்.<br>* யோவான் யார் என்று மக்களுக்கு இன்னும் உறுதியாக தெரியாமலிருந்தது. தேவன் ஒருவரை அனுப்புவதாக உறுதியளித்திருந்தாரே, அவர்தான் இவரோ? தன்னைவிட மிகவும் வல்லமையுள்ள ஒருவர் தனக்குப்பின் வருப்போகிறார் என்று யோவான் விளக்கினார். **(லூக்கா3: 15,16)** அது யாராக இருக்கும்?<br>* ஒரு நாள் கர்த்தராகிய இயேசு மற்றவர்களுடன் சென்று தானும்கூட ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு இயேசு என்ன செய்யத் தேவையில்லை? இயேசு எல்லோரிடமிருந்தும் (நம்மிடமிருந்தும்) வித்தியாசமானவராக இருந்தார், காரணம் அவரில் பாவம் இல்லை, அவர் மனந்திரும்ப வேண்டிய அவசியமுமில்லை என்பதை விவரியுங்கள். ஆனால் இயேசு, தான் நம்மைப் போன்ற மனிதர் என்பதைக் காட்டவும், தேவன் தனக்குச் சொன்னதைச் செய்யவும் விரும்பினார். இயேசுவின் ஞானஸ்நானத்திற்குப் பிறகு, ஆச்சரியமான ஒன்று நடந்தது. தம்முடைய குமாரனைப் பற்றி மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பதாக தேவன் பரலோகத்திலிருந்து பேசினார், பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல இயேசுவின்மீது இறங்கினார். **(லூக்கா 3: 21, 22)** தேவன் ஏன் இயேசுவைப் பற்றி மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பார்?<br>* இயேசுவைப் போன்ற விதத்தில் நாம் தேவனைப் பிரியப்படுத்த முடியாது. ஆனால் நம்முடைய பாவத்திற்காக நாம் உண்மையிலேயே வருந்தும்போது (மனந்திரும்பும்போது) அவருக்காக வாழ்வதை தேர்ந்தெடுக்கும்போது தேவன் மகிழ்ச்சியடைகிறார். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். **லூக்கா 3: 22.** குழந்தைகள் அதன் பின்னணியைப் புரிந்துகொள்கிறார்களா என்று சோதிப்பதற்காக எளிய கேள்விகளைக் கேளுங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்காக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* யோவான் எங்கே பிரசங்கித்தார்?<br>* யோவான் தனது செய்தியை எங்கிருந்து பெற்றார்?<br>* யோவான் மக்களை “மனந்திரும்புங்கள்” என்று கூறினார். இதன் பொருள் என்ன?<br>* மக்கள் மனந்திரும்பிய பிறகு யோவான் அவர்களுக்கு என்ன செய்தார்?<br>* தனக்குப் பின் வரும் நபரைப்பற்றி யோவான் எவ்வாறு விவரித்தார்?<br>* யோவான் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு விரும்பினார்?<br>* இயேசுவின் ஞானஸ்நானம் மற்ற எல்லோரிடமிருந்தும் எவ்வாறு வேறுபட்டது?<br>* நாம் எவ்வாறு தேவனைப் பிரியப்படுத்த முடியும்? |

B 1 கதை 4

பாலைவனத்தில் சோதனை - இந்தக் கதை தவறான செயலுக்கு “மாட்டேன்” என்று சொல்வதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது**<br>* கர்த்தராகிய இயேசு ஒருபோதும் பாவம் செய்யவில்லை.<br>* நாம் சோதிக்கப்படும்போது அவரால் நமக்கு உதவிசெய்ய முடியும்.<br><br>**முக்கிய வசனம்: லூக்கா 4: 8**<br>**வேத பாகம்: லூக்கா 4: 1 - 13** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | குழந்தைகள் எவ்வாறு சோதிக்கப்படலாம் என்று அவர்களின் நிலைமைக்கு பொருத்தமான ஒரு உதாரணத்தை அவர்களுக்கு காட்டுங்கள். (நிலை 2 பாடத்தின் தொடக்கத்தில் உள்ள உதாரணத்தைப் பார்க்கவும்) அவர்கள் ஒரு சோதனையை நடைமுறையில் எவ்வாறு தவிர்ப்பார்கள் என்பதைப் பற்றி பேசுங்கள். கர்த்தராகிய இயேசு தாம் சோதிக்கப்பட்டபோது என்ன செய்தார் என்பதை இன்று நாம் கற்றுக்கொள்ளப்போகிறோம். |
| **கற்றுக்கொடுங்கள்** | * இயேசுவின் ஞானஸ்நானத்திற்குப் பிறகு பரிசுத்த ஆவியானவர் அவரை பாலைவனத்திற்கு அழைத்துச் சென்றார். 40 நாட்கள் பாலைவனத்தில் இருப்பது.அதாவது சூடான, வறண்ட, தனிமையான இடத்திலிருப்பது எப்படியிருக்கும் என்று விவாதிக்கவும். 40 நாட்கள் எவ்வளவு காலம் என்பதை குழந்தைகளுக்குப் புரிந்துகொள்ள உதவும் ஒரு அர்த்தமுள்ள உதாரணத்தைக் கண்டுபிடித்து ஒப்பிட்டுப்பாருங்கள். **(லூக்கா 4: 1)**<br>* இயேசு எதுவும் சாப்பிடாமலிருந்ததால், அவர் மிகவும் பசியுடன் இருந்தார்! எல்லாவற்றிற்கும் மேலாக, அவருக்கு உணவு தேவைப்பட்டிருக்கும். பிசாசு இயேசுவுக்கு அளித்த ஆலோசனையை மேற்கோள் காட்டுங்கள்.<br>* அப்பம் பெற இது எவ்வளவு எளிதான வழி! ஆனால் தேவனுடைய வார்த்தையிலிருந்து ஒரு வசனத்தை பயன்படுத்தி, பிசாசின் சோதனையானது தவறு என்று இயேசு ஒரு பதிலளித்தார். **(லூக்கா 4: 3 - 4)**<br>* பிசாசு மீண்டும் இயேசுவிடம் வந்து, உலகின் அனைத்து ராஜ்யங்களையும் காட்ட ஒரு உயரமான மலைக்கு அழைத்துச் சென்றான். இயேசு அவரை வணங்கினால், இவை அனைத்தும் அவருடையதாகும் என்று அவன் கூறினான். அதற்கு இயேசு, “உன் தேவனாகிய கர்த்தரை வணங்கி, அவருக்கு மட்டுமே சேவை செய்வாயாக” என்று எழுதப்பட்டுள்ளது என்றார். பிசாசுக்கு அவனுடைய யோசனை எவ்வளவு தவறானது என்பதைக் காட்ட இயேசு இரண்டாவது முறையாக பைபிளிலிருந்து வசனங்களைப் பயன்படுத்தினார். **(லூக்கா 4: 5 - 8)**<br>* கடைசியாக பிசாசு இயேசுவை எருசலேமில் உள்ள ஆலயத்தின் மிக உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான். அவர் தேவனுடைய குமாரனாக இருந்தால், தான் தாழ குதிக்கலாம், காயப்படாது என்று அவரிடம் சொன்னான். இயேசுவின் வல்லமையைக் காட்ட அவன் தூண்டினான். ஆனால் இதுவும் தவறு என்று இயேசு அறிந்திருந்தார், மீண்டும் பிசாசுக்கு பைபிளிலிருந்து வசனங்களைப் பயன்படுத்திப் பேசினார். அந்த நேரத்தில் பிசாசு இயேசுவை தனியாக விட்டுப்போனான். **(லூக்கா 4: 9 - 13)** பிசாசு ஏன் வெளியேறினான் என்று நினைக்கிறீர்கள்? அவர் வெற்றி பெற்றாரா? இயேசு எவ்வாறு சோதனையை வென்றார்?<br>* கர்த்தராகிய இயேசு ஒருபோதும் பாவம் செய்யவில்லை என்பதை சுட்டிக்காட்டி முடிக்கவும். அவர் பிசாசை விட வல்லமை உள்ளவர். அவர் தனது பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்படிகிறார் என்பதை பிசாசுக்குக் காட்ட தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தினார். நாம் கர்த்தராகிய இயேசுவைச் சேர்ந்தவர்களாக இருந்தால், தவறான செயல்களுக்கு “மாட்டேன்” என்று சொல்ல அவர் நமக்கு உதவிசெய்வார். இயேசுவைப் போலவே நாமும் தேவனுடைய வார்த்தையையும் அறிந்திருந்தால், சரியானதைச் செய்ய பலம்பெற நாம் அதைப் பயன்படுத்தலாம். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்பித்து விளக்குங்கள். லூக்கா 4: 8.<br>இந்த வசனத்தின் பின்னணியை குழந்தைகள் நினைவில் வைத்திருக்கிறார்களா என்று பாருங்கள். யார் சொன்னது? அது யாருக்கு சொல்லப்பட்டது? இந்தக் குறிப்பிட்ட வார்த்தைகளை இயேசு ஏன் பயன்படுத்தினார்? |
| **நினைவில்வையுங்கள்** | ஒரு வினாடி வினாவுக்கு பதிலாக, டீ1-ல் கர்த்தராகிய இயேசுவைப் பற்றி குழந்தைகள் கற்றுக்கொண்ட அனைத்தையும் “மூளைக்கு வேலை” தருவது பயனுள்ளதாக இருக்கும். ஆசிரியர் ஒரு பிளிப்சார்ட்டில் யோசனைகளை (சிறிய சொற்றொடர்களை அல்லது வார்த்தைகளை விவரிக்க) எழுதலாம். வயதான குழந்தைகள் ஆரம்பத்தில் சிறிய குழுக்களாக செயல்படலாம், பின்னர் ஆசிரியரிடம் அறிக்கையை சமர்ப்பிக்கலாம். |

## B 2 கதை 1

இயேசு தண்ணீரை திராட்சைரசமாக மாற்றுகிறார் - இந்தக் கதை இயேசு ஒரு கலியாணத்திற்குச் சென்றதைப் பற்றியது.

**நாம் அறிந்துகொள்வது:**

* இயேசு இந்த முதலாம் அற்புதத்தை செய்தார், ஏனெனில் அவர் தேவனுடைய குமாரன்.
* கதையில் ஊழியர்கள் செய்ததைப் போல நாமும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

**முக்கிய வசனம்: யோவான் 2: 5**

**வேத பாகம்: யோவான் 2: 1 - 11**

### அறிமுகப்படுத்துங்கள்

உங்கள் கலாச்சாரத்தில் ஒரு கலியாணத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி பேசுங்கள். குழந்தைகள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளட்டும். சில புகைப்படங்கள் கிடைத்தால் வைத்திருங்கள். கலியாணத்தில் ஏதாவது திட்டமிட்டபடி நடக்கவில்லையென்றால் எப்படியிருக்கும்? ஒன்று அல்லது இரண்டு எடுத்துக்காட்டுகளைப் பரிந்துரைக்கவும்.இன்றைய கதையில், கானா என்ற இடத்தில் நடந்த கலியாணத்தில் கர்த்தராகிய இயேசு, அவருடைய சீடர்கள் மற்றும் அவரது தாய் மரியாள் ஆகியோர் விருந்தினர்களாக இருந்தனர். **(யோவான் 2: 1 -2)** என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிப்போம்.

### கற்றுக்கொடுங்கள்

* காட்சியை விவரிக்கவும் - மகிழ்ச்சியான மணமகனும் மணமகளும், விருந்தினர்களும் பேசுவதும் சிரிப்பதுமாக காணப்படுகிறார்கள், அருமையான உணவு மற்றும் திராட்சைரசம், எல்லோரும் கலியாணத்தைக் கொண்டாடி மகிழ்கிறார்கள். ஆனால் அப்போது மரியாள் ஏதோ குறை இருந்ததை உணர்ந்தாள் - திராட்சைரசம் தீர்ந்துபோயிற்று! மணமகனும், மணமகளும் எப்படிஉணர்ந்திருப்பார்கள்? மரியாளுக்கு என்ன செய்ய வேண்டும் என்று தெரியும். உடனே அவள் இயேசுவிடம் சொன்னாள். நாம் எந்தவொரு பிரச்சினையையும் கொண்டுசெல்ல வேண்டிய சிறந்த நபர் இயேசு என்பதை விளக்குங்கள். நாம் அவரிடத்தில் ஜெபிக்க முடியும். பின்னர் அவள் வேலையாட்களிடம் திரும்பி, "அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதைச் செய்யுங்கள்" என்றாள். இயேசு உதவ முடியும் என்று மரியாள் அறிந்திருந்தாள். அவள் அவர் மீது முழு நம்பிக்கை வைத்திருந்தாள். **(யோவான் 2: 3 - 4)**
* அறையில் ஆறு பெரிய கற்சாடிகள் (கிட்டத்தட்ட ஒரு மீட்டர் உயரம்) இருந்தன, அவை சமையலுக்காகவோ அல்லது மக்கள் கால்களை கழுவுவதற்காகவோ தண்ணீரைப் பிடிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதை விளக்குங்கள். அவற்றை தண்ணீரால் விளிம்புவரை நிரப்புங்கள், பின்னர் சிறிது மொண்டு கலியாணத்திற்கு பொறுப்பானவரிடம் எடுத்துச் செல்லுங்கள் என இயேசு வேலைக்காரர்களிடம் கூறினார். இது ஒரு விசித்திரமான காரியமாகத் தோன்றியிருக்கலாம் என்ற உண்மையைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள். நிச்சயமாக இது தண்ணீர்தானா? ஆனால் அவர்கள் கீழ்ப்படிந்தார்கள், அது இனி தண்ணீரல்ல என அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அது திராட்சைரசம்! உண்மையில் முன்பு இருந்ததை விட இது சிறந்த திராட்சைரசம் என்று அவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டனர். **(யோவான் 2: 6 - 10)** கர்த்தராகிய இயேசு எப்போதும் சிறந்ததைக் கொடுக்கிறார்!
* இது ஒரு அதிசயம் என்று விளக்குங்கள். இயேசு செய்ததை வேறு யாரும் செய்திருக்க முடியாது. இவர் செய்தார், ஏனென்றால், அவர் தேவனுடைய குமாரன், எல்லாவற்றையும் படைத்தவர் (சிருஷ்டிகர்).
* ஊழியர்கள் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தது மிகவும் முக்கியமானது. குழந்தைகளைப் பற்றி சிந்திக்கச் சொல்லுங்கள். அவர்கள் கீழ்ப்படியாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும். நம்மிடம் உள்ள பிரச்சினை - நம் பாவம் பற்றி பேசுங்கள். கர்த்தராகிய இயேசு சிலுவையில் மரித்ததால் நம்முடைய பிரச்சினைக்கு தீர்வு இருக்கிறது. நமது பாவத்திற்குரிய தண்டனையை எடுத்துக் கொண்டார். ஆனால் நாம் அவர்மீது நம்பிக்கை வைக்கும்போதுதான் அவரால் முடியும். நமது வாழ்க்கையில் ஒரு அதிசயம் செய்து நமது பாவத்தை மன்னிக்கிறார்.

### கற்றுக்கொள்ளுங்கள்

முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். யோவான் 2: 5.
சூழ்நிலையை விளக்குங்கள்.
கதையில் "அவர்" என்பது யார் என்று குழந்தைகளுக்குத் தெரியுமா என்று கேட்டுப்பாருங்கள்.

### நினைவில்வையுங்கள்

கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.

* கலியாணம் எங்கே நடந்தது?
* கலியாணத்திற்கு வந்திருந்த சில விருந்தினர்களின் பெயர்களைக் குறிப்பிடுங்கள்.
* இயேசு சொல்வதைக் கேட்கும்படி வேலைக்காரர்களிடம் சொன்னது யார்?
* இயேசு என்ன செய்யும்படி வேலைக்காரர்களிடம் சொன்னார்?
* எத்தனை தண்ணீர் கற்சாடிகள் இருந்தன?
* வேலைக்காரர்கள் கற்சாடியில் இருந்ததை மொண்டபோது என்ன நடந்தது?
* எல்லோரும் என்ன ஒப்புக்கொண்டார்கள்?
* இந்த அற்புதத்தை இயேசுவால் ஏன் செய்ய முடிந்தது?
* நம் வாழ்வில் உள்ள பிரச்சினை என்ன?
* வேலைக்காரர்களிடமிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?

B 2 கதை 2

இயேசு ஒரு நோய்வாய்ப்பட்ட சிறுவனை குணமாக்குகிறார் - இந்தக் கதை இயேசுவின் வல்லமையைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* இயேசு தேவனுடைய குமாரன் என்பதால் குணமாக்கும் வல்லமை உடையவராயிருந்தார்.<br>* அரசு அதிகாரியைப் போலவே நாமும் அவரை நம்ப வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.<br>**முக்கிய வசனம்: யோவான் 4: 50**<br>**வேத பாகம்: யோவான் 4: 46 - 54** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | கடந்த வார கதையை மீள்பார்வை செய்யவும். கலியாணத்தில் என்ன நடந்தது? எங்கு நடந்தது? கானாவூரிலும் அதற்கு அப்பாலும் அதிசயம் பற்றிய செய்தி எவ்வாறு பரவியது என்பதைப் பற்றி பேசுங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * சில நாட்களுக்குப் பிறகு கர்த்தராகிய இயேசு மீண்டும் கானாவூருக்கு வந்தார். அருகிலுள்ள நகரமான கப்பர்நகூமில், இயேசு கானாவூரில் இருக்கிறார் என்று ஒரு முக்கியமான மனிதர் (அரச அதிகாரி) கேள்விப்பட்டார். அவருக்கு உதவ இயேசுவால் மட்டுமே முடியும்! அவரது மகன் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். இயேசு தன்னோடு வீட்டிற்கு வந்தால் அவர் தனது மகனை சுகமாக்க முடியும் என்று அரசு அதிகாரி நினைத்தார். **(யோவான் 4: 47)** நிலை 2 குழந்தைகளுக்கு இரண்டு நகரங்களைக் காட்டும் வரைபடத்தைக் காட்டலாம்.<br>* அரசு அதிகாரி இயேசுவைக் கண்டுபிடிக்க 20 மைல் பயணம் செய்தார். அவர் எப்படி உணர்ந்திருப்பார் என்று கற்பனை செய்து பாருங்கள் - சோர்வு, பதட்டம், அவநம்பிக்கை. தன்னுடன் வரும்படி இயேசுவிடம் கெஞ்சினார். அவர் தனது மகனைப் பற்றி அவரிடம் சொன்னபோது, அவருடைய மகன் பிழைப்பான் எனவே வீட்டிற்குத் திரும்பிப்போகும்படி இயேசு சொன்னார். இயேசு அவருடன் வரப்போவதில்லை! அவர் எவ்வாறு செயல்பட்டிருப்பார் என்பதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள், பின்னர் அவர் இயேசுவின் வார்த்தையை விசுவாசித்துச் சென்றார் என்பதை விளக்குங்கள். இயேசுவின் மீது அவருக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்தது, தனது மகனை குணப்படுத்த இயேசு 20 மைல் வர தேவையில்லை என்று அவர் அறிந்திருந்தார். **(யோவான் 4: 47 - 50)** இந்த வகையான நம்பிக்கையை இயேசு நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார் என்பதை விளக்குங்கள். நாம் அவரைப் பார்க்கவோ அல்லது அவர் உரக்கப் பேசுவதைக் கேட்கவோ முடியாது, ஆனால் அவர் நம்மை நேசிக்கிறார், நம்மை மன்னிக்க விரும்புகிறார் என்று அவருடைய வார்த்தையான பைபிளில் வாக்குறுதி அளிக்கிறார்.<br>* அவர் வீட்டிற்கு செல்லும் வழியிலேயே,அவருடைய ஊழியர்கள் அவரை ஒரு நல்ல செய்தியுடன் சந்தித்தனர். அது என்ன என்று குழந்தைகளைக் கேளுங்கள், அவர்கள் நிதானிக்கட்டும். ஆம்! அவரது மகன் குணமாகிவிட்டான். அது எத்தனை மணிக்கு நடந்தது என்று கேட்டபோது, இயேசு உன் மகன் பிழைப்பான் என்று சொன்ன அதே நேரம் என்று அவர் அறிந்துகொண்டார். முழு குடும்பமும் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது! தாம் சொல்வதைப் போலவே இயேசு தேவனுடைய குமாரன் என்று அவர்கள் அனைவரும் உறுதியாக நம்பினர். **(யோவான் 4: 51 - 53)**<br>* இயேசு தேவனுடைய குமாரன் என்று நாமும் நம்ப வேண்டும், அவர் மீது நம் நம்பிக்கையை காட்ட வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நாமும் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்க முடியும். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **யோவான் 4: 50.** அதன் அர்த்தத்தை மீண்டும் செயல்படுத்துங்கள் ”ஒருவருடைய வார்த்தையை அப்படியே ஏற்றுக்கொள்ளுதல்“ என்றால் என்ன அர்த்தம் என்பதை வலியுறுத்திச் சொல்லுங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* அரசு அதிகாரியின் பிரச்சினை என்ன?<br>* அவர் இயேசுவை எங்கே கண்டுபிடித்தார்?<br>* அவர் எவ்வளவு தூரம் பயணிக்க வேண்டியிருந்தது?<br>* இயேசு அவரை என்ன செய்யச் சொன்னார்?<br>* வீட்டிற்கு திரும்பும் வழியில் அவரை சந்தித்தது யார்?<br>* அவர்கள் என்ன செய்தி கொண்டுவந்தார்கள்?<br>* மகன் எப்போது சுகமானான்?<br>* விடுபட்ட வார்த்தையை நிரப்பவும் - “அரசு அதிகாரி இயேசுவை முற்றிலும் ----------”. |

B 2 கதை 3

இயேசுவும் பர்த்திமேயுவும் - பர்த்திமேயு என்ற குருடனை இயேசு குணப்படுத்தியதைப் பற்றியது இந்தக் கதை.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* கர்த்தராகிய இயேசு பர்த்திமேயுவுக்கு உதவ விரும்பினார், அவனுடைய வாழ்க்கையை மாற்றும் வல்லமை உடையவராக இருந்தார்.<br>* நம்முடைய பாவத்தை நீக்கி நம் வாழ்க்கையை மாற்ற இயேசு விரும்புகிறார்.<br>**முக்கிய வசனம்: மாற்கு 10: 52**<br>**வேத பாகம்: மாற்கு 10: 46 - 52** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | வண்ணங்களைக் காணவும், இடங்களை ரசிக்கவும், மக்களை அடையாளம் காணவும், புத்தகங்களைப் படிக்கவும், விளையாடுவதற்கும், டிவி பார்க்கவும் உதவும் கண்பார்வை ஒரு அற்புதமான பரிசு என்பதைப் பற்றி பேசுங்கள். நீங்கள் வாழும் சமுதாயத்தில் பார்வையற்றவர்களாக இருப்பது எப்படி இருக்கும் என்பதை உணர்வுப்பூர்வமாக விவாதிக்கவும். இயேசுவின் காலத்தில், பார்வையற்றவருக்கு வாழ்க்கை மிகவும் கடினமாக இருந்திருக்கும் என்பதை விளக்குங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * பர்த்திமேயு எரிகோவில் வாழ்ந்த ஒரு குருடன். அவனைப் பொறுத்தவரை, ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரியாக இருந்தது - உயிர்வாழ்வதற்காக, சாலையின் ஓரத்தில் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான். ஆனால் இன்று வேறுபட்டது. சத்தம், கூட்டம் மற்றும் இயேசு வருவதை பர்த்திமேயு கண்டுபிடிப்பதை விவரிக்கவும். திடீரென்று பர்த்திமேயு மிகவும் உற்சாகமாக இருந்தான்! இயேசு செய்த காரியங்களைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருந்தான். இயேசு தனக்கு என்ன செய்ய வேண்டும் என்று அவன் நினைத்தான் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பர்த்திமேயு உரத்த குரலில் கூப்பிட ஆரம்பித்தான், இயேசுவை உதவுமாறு மன்றாடினான். சிலர் அவன் மீது கோபமடைந்து அமைதியாக இருக்கும்படி சொன்னார்கள், ஆனால் அவனோ இன்னும் சத்தமாக கத்தினான்! **(மாற்கு 10: 46 - 48)** பர்த்திமேயு சரியானதைத்தான் செய்தான், ஏனென்றால் இயேசு மட்டுமே அவனுக்குப் பார்வை அளிக்க முடியும் என்பதை விளக்குங்கள். கர்த்தராகிய இயேசு மட்டுமே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும். கர்த்தராகிய இயேசுவைச் சந்திக்க பர்த்திமேயுக்கு தேவைப்பட்டதைப் போலவே, நம் ஒவ்வொருவருக்கும் அவருடன் ஒரு சந்திப்பு தேவை.<br>* அந்த சமயத்தில் இயேசு நின்று, ஒருவரிடம் பர்த்திமேயுவை தன்னிடம் அழைத்துவரும்படி கூறினார். அவன் எவ்வாறு செயல்பட்டான் என்பதை விவரிக்கவும். பர்த்திமேயு இப்போது எப்படி உணர்ந்திருப்பான்? இயேசு அவனிடம் என்ன வேண்டும் என்று கேட்டார், அவன் பார்வை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். நீ போகலாம் உன் விசுவாசம் உன்னை குணமாக்கியது என்று இயேசு சொன்னார். உடனே, பர்த்திமேயுவால் பார்க்க முடிந்தது! தன்னைச் சுற்றி என்ன பார்த்திருப்பான் என்று குழந்தைகளிடம் கேளுங்கள். சாலையில் இயேசுவைப் பின்தொடர்கையில் அவனுடைய உணர்வுகளையும் அவனுடைய செயல்பாட்டையும் விவரிக்கவும். **(மாற்கு 10: 49 - 52)**<br>* பர்த்திமேயு இயேசுவை சந்தித்த அந்த நாளை ஒருபோதும் மறக்கமாட்டான். இயேசு அவனுக்கு ஒரு அற்புதம் செய்திருந்தார், அவனது வாழ்க்கையே மாறிவிட்டது! நம் வாழ்க்கையில் உள்ளே உள்ளத்தை மாற்றுவதன் மூலமும், நம்முடைய பாவத்தை நீக்குவதன் மூலமும் கர்த்தராகிய இயேசு இதைவிட பெரிய அதிசயத்தை நமக்குச் செய்ய விரும்புகிறார் என்பதை விளக்குங்கள். நாம் அவரிடம் வந்து அவரை நம்பும்போது பர்த்திமேயு பெற்றதைப் போல உண்மையான மகிழ்ச்சியைப் பெறுவோம். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **மாற்கு 10: 52.** பர்த்திமேயுவின் "விசுவாசம்" கர்த்தராகிய இயேசுவை நம்புவதாகும் என்பதை விளக்குங்கள். தன் பார்வையைத் திருப்பிக் கொடுக்க இயேசுவுக்கு வல்லமை இருக்கிறது என்பதை அவன் அறிந்திருந்தான். நாம் அவரை நம்ப வேண்டும் என்று இயேசு விரும்புகிறார். |
| **நினைவில்வையுங்கள்** | வினாடி வினாவுக்கு சரியா அல்லது தவறா முறையைப் பயன்படுத்தவும்.<br>* பர்த்திமேயு கானாவூரில் இருந்தான்.<br>* அவன் குருடனாக இருந்தான்.<br>* அவனால் பேச முடியவில்லை.<br>* இயேசுவைப் பார்க்க நிறைய பேர் வந்திருந்தார்கள்.<br>* மக்கள் அவனை அமைதியாக இருக்கச் சொன்னபோது பர்த்திமேயு அமைதியாக இருந்தான்.<br>* இயேசு அவன் சொல்வதை கேளாதவர்போல இருந்தார்.<br>* பர்த்திமேயு எழுந்து இயேசுவிடம் வந்தான்.<br>* கூட்டம் அவனை இயேசுவிடம் வரவிடாமல் தடுத்தது.<br>* இயேசுவைச் சந்தித்தபின் பர்த்திமேயு தொடர்ந்து பிச்சை எடுத்தான்.<br>* கர்த்தராகிய இயேசு நம் ஒவ்வொருவருக்கும் ஒரு அற்புதத்தைச் செய்ய முடியும். |

B 2 கதை 4

இயேசு தொழுநோயாளர்களை குணப்படுத்துகிறார் - இந்தக் கதை “இயேசுவுக்கு நன்றி” கூறுவதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இயேசுவுக்குக் கீழ்ப்படிந்தார்கள், குணமடைந்தார்கள்.<br>* கர்த்தராகிய இயேசு நமக்கு செய்த நன்மைகளுக்காக நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும் என விரும்புகிறார்.<br>**முக்கிய வசனம்: சங்கீதம் 107: 21**<br>**வேத பாகம்: லூக்கா 17: 11 - 19** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | நன்றியுடைவராக இருப்பதைப் பற்றி பேசுங்கள். ஒவ்வொரு நாளும் (எ.கா. உணவு, நீர், வீடுகள், சுகாதாரம், குடும்பம், பள்ளி) நன்றி சொல்லவேண்டிய விசயங்களைப் பற்றி சிந்திக்கும்படி குழந்தைகளிடம் கேளுங்கள், அவற்றை ஒரு பட்டியலாக எழுதுங்கள். நாம் அனுபவிக்கும் நன்மையான எல்லாவற்றையும் நமக்குக் கொடுப்பவர் தேவன் என்பதை விளக்கி, நன்றி ஜெபத்துடன் தொடங்குங்கள். வசதி குறைவு உள்ளவர்களை நினைவில் கொள்க. |
| **கற்றுக்கொடுங்கள்** | * இன்றைய கதை கடினமான வாழ்க்கையை அனுபவித்த பத்து நபர்களைப் பற்றியது. தொழுநோய் அவர்களை எவ்வாறு பாதித்தது என்பதை விளக்குங்கள். பைபிள் டைம் நிலை 1 அல்லது 2 இன் அறிமுகத்தைக் காண்க.<br>* இருப்பினும், ஒரு நாள், பரபரப்பான ஒன்று நடந்தது. அவர்கள் வாழ்ந்த பகுதிக்கு இயேசு சென்றிருந்தார். அவர்கள் யாரும் மக்களின் அருகில் வர அனுமதிக்கப்படவில்லை என்றாலும், அவர்கள் அவரை தூரத்தில் பார்க்க முடிந்தது, இயேசு தங்களுக்கு உதவ முடியும் என்று அவர்கள் அறிந்தார்கள். அவர்கள் ஏகமாக, “இயேசுவே, எஜமானரே எங்களுக்கு இரக்கம் காட்டும்!” என்று தங்களால் முடிந்தவரை சத்தமாக அவரை அழைத்தார்கள். **(லூக்கா 17: 11 - 13)**<br>* விண்ணப்பத்தைக் கேட்ட இயேசு அவர்களிடம் “போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காட்டுங்கள்” என்று மறுமொழி அளித்தார். தொழுநோயால் குணமடைந்த எவரும் தன்னை ஆசாரியர்களிடம் காண்பிக்க வேண்டும் என்று சட்டத்தில் கூறப்பட்டுள்ளது என்பதை விளக்குங்கள். கர்த்தராகிய இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து, இயேசு தங்களை குணமாக்கப் போகிறார் என்று உணர்ந்து புறப்பட்டுப்போனார்கள். அவர்கள் செல்லும் வழியில் திடீரென்று அவர்களின் தொழுநோய் மறைந்தது! இயேசு அவர்களை குணப்படுத்தியிருந்தார். அவர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள்? **(லூக்கா 17: 14)** கர்த்தராகிய இயேசுவுக்குக் கீழ்ப்படிவதில் அவர்கள் சரியானதைச் செய்தார்கள். அவர் நமக்காக வைத்திருக்கும் எல்லா ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் பெற வேண்டுமென்றால் நாமும் அவரை நம்பிக் கீழ்ப்படிய வேண்டும்.<br>* நிகழ்ந்த அற்புதமான மாற்றத்தைக் கண்டு அந்த பத்து பேரும் ஆச்சரியப்பட்டார்கள், ஆனால் அவர்களில் ஒருவன் மட்டுமே “நன்றி” சொல்ல நினைத்தான். நடந்த அற்புதத்தைக் கண்டு அவன் தேவனைப் புகழ்ந்தான்,அவன் விரைந்து வந்து இயேசுவைக் கண்டுபிடித்து அவருடைய பாதத்தில் பணிந்தான். இந்த மனிதன் ஒரு சமாரியன் என்பதால் இயேசு அல்லது மற்றவர்களைப் போன்ற அதே நாட்டினன் அல்ல என்பதால் அந்த மனிதன் வேறுபட்டவன் என்பதை விளக்குங்கள். அந்த மனிதன் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பதில் இயேசு மிகவும் மகிழ்ச்சியடைந்தார், மேலும் அவன் கீழ்ப்படிந்தபோது விசுவாசத்தைக் காட்டியதற்காக அவனைப் பாராட்டினார். மற்ற ஒன்பது பேரைப் பற்றி இயேசு எப்படி உணர்ந்தார் என்று நினைக்கிறீர்கள்? **(லூக்கா 17: 15 -19)** அன்று மிகவும் மகிழ்ச்சியான நபர் யார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **சங்கீதம் 107: 21**.<br>அறிமுகமில்லாததாக எல்லா வார்த்தைகளையும் விளக்குங்கள் |
| **நினைவில்வையுங்கள்** | ஒரு வினாடி வினாவுக்குப் பதிலாக, ஒவ்வொரு குழந்தையும் நன்றிசொல்லும் விதத்திலுள்ள ஏதாவது படத்தை அளிப்பதன் மூலம் எளிமையாக குழந்தைகள் ஒரு படத்தொகுப்பை உருவாக்க முடியும். மற்ற குழந்தைகள் தேவனுக்கு நன்றி என்ற வார்த்தைகளை வண்ணம்தீட்டி அதை படங்களின் நடுவில் வைக்கலாம்.<br><br>சிறு பிள்ளைகளின் ஒரு சிறிய குழு 10 தொழுநோயாளிகளைக் குறிக்க 10 எளிய படங்களை உருவாக்கலாம். |

B 3 கதை 1

இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்ளுதல் - இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்ள நேரம் ஒதுக்குவதை பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* இயேசு சொல்வதைக் கேட்பதும் அவரிடமிருந்து கற்றுக்கொள்வதும் மிக முக்கியமானது.<br>* பைபிளைப் படிப்பதன் மூலம் நாம் இயேசு சொல்வதைக் கேட்க வேண்டியது அவசியமாகும்.<br>**முக்கிய வசனம்: லூக்கா 10: 42**<br>**வேத பாகம்: லூக்கா 10: 38 - 42** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | ஒரு யோசனையை தேர்வுசெய்க:<br>உங்கள் வீட்டிற்கு பார்வையாளர்களைக் கொண்டுவருவதற்கு உங்கள் அம்மா எவ்வாறு தயார் செய்வார் என்பதைப் பற்றி பேசுங்கள் - உணவு சமைத்தல் முதலியன<br>குழந்தைகளுக்கு பொருத்தமான சூழ்நிலைகளைப் பற்றி பேசுங்கள் - கேட்பது முக்கியம் - புதிய திறமையைக் கற்றல், வழிமுறைகளை கற்றல் ... |
| **கற்றுக்கொடுங்கள்** | * மார்த்தாளும் மரியாளும் இயேசுவின் நல்ல நண்பர்கள். ஒரு நாள் மார்த்தாள் இயேசுவையும் சீடர்களையும் சாப்பாட்டுக்கு அழைத்தாள். அவள் செய்திருக்கக்கூடிய சில முன்னேற்பாடுகளை சிந்திக்க குழந்தைகளை ஈடுபடுத்துங்கள், அல்லது மேலேயுள்ள முதல் யோசனையுடன் இதை தொடர்புபடுத்தலாம். விருந்தினர்களின் வருகையை கற்பனை செய்து பாருங்கள். **(லூக்கா 10: 38)**<br>* மார்த்தாளுக்கு இன்னும் நிறைய செய்ய வேண்டியிருந்தது! அவள் தொடர்ந்து உணவைத் தயாரிக்கும்போது,அவளுடைய சகோதரி, மரியாள் இயேசுவின் பாதத்தருகே அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். மார்த்தாள் எப்படி உணர்ந்தாள் என்பதை விளக்குங்கள்... ஒருவேளை குழந்தைகளையும் இதில் தொடர்புபடுத்தலாம்! மார்த்தாள் பயன்படுத்திய அதை வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். **(லூக்கா 10: 39 - 40)**<br>* இயேசு மார்த்தாளிடம் கனிவாகப் பேசினார், அவள் புலம்பத் தேவையில்லை, மனங்கலங்கத் தேவையில்லை என்று கூறினார். மார்த்தாள் இயேசுவுக்கு ஒரு அருமையான உணவை கொடுக்க விரும்பி ஒரு நல்ல காரியத்தைச் செய்து கொண்டிருந்தாள், ஆனால் அது மிக முக்கியமான காரியம் அல்ல. அதிலும் சிறந்த காரியத்தைச் செய்தது யார்? ஆம் அது மரியாள்! மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்லப்பங்கைத் தெரிந்துகொண்டாள் என்று இயேசு சொன்னார். **(லூக்கா 10: 41 - 42)**<br>* மரியாள் தேர்ந்தெடுத்த சிறந்த காரியம் என்ன? இயேசு சொல்வதைக் கேட்கும் சிறந்த பாக்கியத்தை மரியாள் பெற்றாள். பைபிளிலிருந்து வாசிப்பதன் மூலமும் கற்பதன் மூலமும் இயேசு சொல்வதைக் கேட்பதற்கு நாம் எவ்வாறு நேரத்தை செலவிட வேண்டும் என்பதைப் பற்றி பேசுங்கள். அப்போது நாம் அவரை நன்கு அறிவோம், அவருக்குப் பிரியமானதை அறிவோம். பெரிய குழந்தைகளடங்கிய குழுவினர் இதற்கு எவ்வாறு முன்னுரிமையளிப்பது என்பதைப் பற்றி விவாதிக்கலாம். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **லூக்கா 10: 42**. மரியாள் தேர்ந்தெடுத்த நல்லப் பங்கின் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* சகோதரிகள் எங்கே வாழ்ந்தார்கள்?<br>* மார்த்தாள் யாரிடம் முறையிட்டாள்?<br>* பார்வையாளர்கள் யார்?<br>* எந்த சகோதரியின் உதாரணத்தை நாம் பின்பற்ற வேண்டும்?<br>* எந்த சகோதரி இயேசுவோடு நேரம் செலவிட்டாள்?<br>* எந்த சகோதரி இயேசுவை சேவிக்க விரும்பினாள்?<br>* நாம் எவ்வாறு இயேசுவைக் கேட்க முடியும்?<br>* எந்த சகோதரி வருத்தப்பட்டாள்?<br>* இந்தக் கதை பைபிளின் எந்தப் புத்தகத்தில் காணப்படுகிறது?<br>* மார்த்தாள் ஏன் வருத்தப்பட்டாள்? |

B 3 கதை 2

இயேசுவின் மூலம் ஜீவன் - மரித்த ஒரு மனிதனை இயேசு மீண்டும் உயிர்ப்பிப்பதைப் பற்றியது இந்தக் கதை.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* லாசருவை மீண்டும் உயிர்ப்பிக்க இயேசுவுக்கு வல்லமை இருந்தது.<br>* நாம் அவரை நம்பும்போது கர்த்தராகிய இயேசு நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க முடியும்.<br>**முக்கிய வசனம்: யோவான் 11: 25**<br>**வேத பாகம்: யோவான் 11: 1 - 7, 17 - 44** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | நிலை 1க்கு, தேவன் எவ்வாறு குடும்பங்களில் மக்களை வைக்கிறார் என்பதைப் பற்றி கலந்துரையாடுங்கள். கடந்த வார கதையில் வந்த இரண்டு சகோதரிகளின் பெயர்களை நினைவில் வைத்திருக்கிறீர்களா என்று குழந்தைகளிடம் கேளுங்கள். இப்பொழு லாசருவை அறிமுகப்படுத்துங்கள்.<br><br>நிலை 2 ஐப் பொறுத்தவரை, நம் வாழ்வில் உள்ள காரியங்கள் எப்போதுமே திட்டமிட்டபடி நடப்பதில்லை என்பதைப் பற்றி பேசுங்கள். கர்த்தராகிய இயேசு எப்படி ஒவ்வொரு சூழ்நிலையையும் கட்டுப்படுத்துகிறார் மற்றும் நன்மையாக மாற்றுகிறார் என்பதைப் பற்றி பேசுங்கள். இன்றைய கதையில் மரியாள் மற்றும் மார்த்தாள் ஒரு கடினமான பிரச்சனையை எதிர்கொண்டனர். |
| **கற்றுக்கொடுங்கள்** | * மரியாள் மற்றும் மார்த்தாளின் சகோதரன் லாசரு மிகவும் உடல்நிலை சரியில்லாமல் இருந்தான். இயேசு அங்கே இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள், எனவே அவர்கள் அவரை அழைத்துவர ஆட்களை அனுப்பினார்கள். அவர் லாசருவை குணமாக்க முடியும் என்பதை அவர்கள் அறிந்தார்கள். ஆனால் இயேசு வரக்கூடாது என்று தேர்ந்தெடுத்தார்! அவர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள்? மரியாளும் மார்த்தாளும் இதை புரிந்துகொள்வது கடினம் என்றாலும், எல்லாம் கர்த்தராகிய இயேசுவின் கட்டுப்பாட்டில் இருந்தது, எது சிறந்தது என்பதை அவர் அறிந்திருந்தார் என்பதை விளக்குங்கள். **(யோவான் 11: 1 - 6)**<br><br>* விரைவில் லாசரு இறந்தான், துணியால் மூடப்பட்டு ஒரு குகையில் நுழைவாயிலின் குறுக்கே ஒரு பெரிய கல்லைக் கொண்டு மூடி புதைக்கப்பட்டான். இதை நாம் ஒரு கல்லறை என்று அழைக்கிறோம். மார்த்தாளும் மரியாளும் இப்போது எப்படி உணர்ந்திருப்பார்கள் என்பதை உணர்ச்சியுடன் ஆராயுங்கள். நான்கு நாட்களுக்குப் பிறகு, இயேசு வருவதாகக் கேள்விப்பட்ட மார்த்தாள், அவரைச் சந்திக்க வெளியே சென்றாள். லாசரு மீண்டும் உயிரோடு வருவான் என்று இயேசு அவளுக்கு விளக்கினார். இயேசு பேசிய வார்த்தைகளைப் பயன்படுத்தி **(வசனம் 25)** ஒருவரை மரித்தோரிலிருந்து மீண்டும் கொண்டு வரக்கூடிய வல்லமையே உயிர்த்தெழுதல் என்பதை விளக்குங்கள். வேறு யாருக்கும் இந்த வல்லமை இல்லை! **(யோவான் 11: 17 - 27)**<br><br>* பின்னர் இயேசு மரியாளுடனும் மார்த்தாளுடனும் லாசருவின் கல்லறைக்குச் சென்றார். சோகத்தால் இயேசு அழுதார். பின்னர் அவர் சிலரை கல்லை நீக்கும்படி சொல்லி, “லாசருவே வெளியே வா!” என்று உரத்த குரலில் கூப்பிட்டார். எல்லோரும் ஆச்சரியப்பட, லாசரு கல்லறையிலிருந்து வெளியே வந்தான், இன்னும் துணிகளால் கட்டப்பட்டிருந்தான். அன்றே இயேசு லாசருவை உயிர்ப்பிக்க தனக்கு வல்லமை இருக்கிறது என்பதை நிரூபித்தார்! இயேசு செய்த அந்த அற்புதம், அவர் வல்லமையுள்ளவர் மற்றும் சிறப்புவாய்ந்தவர் என்பதை அறிய அவர்களுக்கு உதவியது. இந்த சம்பவத்திலிருந்து அவர் அவர்களுக்குக் கற்பித்த எல்லாவற்றையும் பற்றி பேசுங்கள் - அவருடைய வேளை, அவர் அவர்களின் சோகத்தைப் பகிர்ந்துகொள்வது, அவருடைய வல்லமை, அவருடைய அதிகாரம்... லாசரு இறப்பதற்கு முன்பு இயேசு வந்திருந்தால், அதிசயம் தேவைப்பட்டிருக்காது என்பதை நீங்கள் குறிப்பிடலாம்! |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **யோவான் 11: 25.** இந்த பெயரைப் பயன்படுத்தும் போது இயேசு தன்னைப் பற்றிய ஒரு மிக முக்கியமான உண்மையைக் குறிப்பிடுவதை விளக்குங்கள். அதிக வேத அறிவுள்ள குழந்தைகள் ”நான்” என்று சொல்லும் மற்ற கூற்றுகளை நினைவுகூர முடியும். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* மிகவும் நோய்வாய்ப்பட்டது யார்?<br>* இயேசு வருவதற்கு எவ்வளவு காலம் பிடித்தது?<br>* இயேசுவைச் சந்திக்க எந்த சகோதரி வெளியே சென்றாள்?<br>* மார்த்தாளிடம் பேசியபோது இயேசு தனக்கு என்ன பெயரைப் பயன்படுத்தினார்?<br>* லாசருவின் கல்லறையில் தாம் எப்படி உணர்ந்தார் என்பதை இயேசு எப்படி வெளியில் காட்டினார்?<br>* அவர் என்ன வார்த்தைகளைச் சொன்னார்?<br>* அன்று இயேசு அனைவருக்கும் என்ன நிரூபித்தார்?<br>* நாம் எவ்வாறு நித்திய ஜீவனைப் பெற முடியும்? |

B 3 கதை 3

இயேசுவை நேசித்தல் - இந்தக் கதை மரியாள் இயேசுவிடம் அன்பு காட்டுவதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* மரியாள் தான் செய்த செயலின் மூலம் இயேசுவின்மீதுள்ள தனது அன்பைக் காட்டினாள<br>* இயேசு நமக்குக் காட்டிய அன்புக்கு ஈடாக நாம் அவரை நேசிக்க வேண்டும்.<br>**முக்கிய வசனம்: 1 யோவான் 4: 19**<br>**வேத பாகம்: யோவான் 12: 1 - 11** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | 'நன்றி பரிசுகளைப்' பற்றி பேசுங்கள். வசதியாக இருந்தால், உதாரணத்திற்காக உங்கள் கலாச்சாரத்திற்கு ஏற்ற பொதுவான சில பரிசுகளை வைத்திருங்கள், மேலும் அவற்றை யாருக்கு கொடுத்தால் பொருத்தமாயிருக்கும் என்பதை முடிவு செய்யுங்கள். மரியாள், மார்த்தாள் மற்றும் லாசரு இயேசுவுக்கு எவ்வளவு நன்றியுள்ளவா்களாக இருந்தார்கள் என்பதற்கு கடந்த வார கதையை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * மரியாளும் மார்த்தாளும் லாசருவும் இயேசுவை அழைத்து ஒரு விருந்து அளிக்க முடிவு செய்தனர். அக்காட்சியை கற்பனைசெய்து பாருங்கள் - விருந்தினர்களால் நிரப்பப்பட்ட வீடு, லாசரு கட்டாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கிறான், இயேசு மிகவும் முக்கியமான விருந்தினர், மார்த்தாள் சேவை செய்கிறாள். **(யோவான் 12: 1 - 2)**<br>* விருந்தின் போது,மரியாள் இயேசுவின் அருகில் வந்து, மிகவும் விலையுயர்ந்த ஒரு வாசனை திரவியத்தின் பாட்டிலை வைத்திருந்தாள். நேராக, அவள் அதை இயேசுவின் பாதங்களில் ஊற்றி, அதைத் தன் தலைமுடியால் துடைத்தாள். மற்ற விருந்தினர்கள் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கத் திரும்பியதும், வாசனை திரவியத்தின் மிகுந்த வாசனையை கவனித்ததும் எல்லோருடைய கவனமும் மரியாள் பக்கமானது என்பதை விவரிக்கவும். மரியாள் இயேசுவை மிகவும் நேசித்ததால் இதைச் செய்ததாக விளக்குங்கள் - எல்லாவற்றையும் விட அவர் அவளுக்கு மிகவும் மதிப்பு வாய்ந்தவர். **(யோவான் 12: 3)**<br>* இயேசுவின் சீடர்களில் ஒருவனான யூதாஸுக்கு மரியாள் ஏன் வாசனை திரவியத்தை ஊற்றினாள் என்று புரியவில்லை. அவனுக்கு அது வீணானது போல் தோன்றியது! யூதாஸ் சொன்ன வார்த்தைகளை மேற்கோள் காட்டி யூதாஸ் பேராசையுள்ளவன் மற்றும் திருடன் என்று விளக்குங்கள். (நிலை 2 பாடம்) **(யோவான் 12: 4 - 6)**<br>* கர்த்தராகிய இயேசுவிடம் யூதாசும் மரியாளும் வெவ்வேறு மனப்பான்மையைக் காட்டினர். யூதாஸ் இயேசுவின் மகத்துவத்தை உணரவில்லை மற்றும் அவர்மீது அவனுக்கு இருதயத்தில் எந்த அன்பும் இல்லை. ஆயினும், மரியாளைப் பொறுத்தவரை, இயேசு விலையேறப்பெற்றவர், அவள் அவரை மிகவும் நேசித்தாள். அவள் செய்ததைப் பற்றி அவர் மகிழ்ச்சியடைந்தார். **(யோவான் 12: 7 - 8)** நாம் யாருடைய முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டும்?<br>* மரியாவைப் போலவே, அவர் நம்மீது வைத்திருக்கும் அன்புக்கு ஈடாக நாம் அவரை நேசிக்க முடியும். அவரை நம்புவதன் மூலமும், ஜெபிப்பதன் மூலமும், அவருடைய வார்த்தையைப் படிப்பதன் மூலமும், அவருக்குக் கீழ்ப்படிவதன் மூலமும், மற்றவர்களை நேசிப்பதன் மூலமும், அவரைப் பற்றிச் சொல்வதன் மூலமும் அவருடன் நேரத்தை செலவிடுதன் மூலமும் அவரை நேசிக்கலாம். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **1 யோவான் 4: 19**. "அவரை" மற்றும் "அவர்" என்ற வார்த்தைகள் யாரை குறிப்பிடுகின்றன என்பதை குழந்தைகள் புரிந்துகொண்டதை உறுதிசெய்யுங்கள். நம்மீது அவர் வைத்திருக்கும் அன்பின் விளைவே நம்முடைய அன்பு என்பதை விளக்குங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* விருந்து எங்கே நடைபெற்றது?<br>* அங்கு இருந்த மிகவும் முக்கியமான நபர் யார்?<br>* மரியாள் என்ன செய்தாள்?<br>* மரியாள் இதை ஏன் செய்தாள்?<br>* மரியாள் வாசனை திரவியத்தை இயேசுவின் மீது ஊற்றியது பற்றி யூதாஸ் என்ன சொன்னான்?<br>* கர்த்தராகிய இயேசுவை நாம் ஏன் நேசிக்க வேண்டும்? |

B 3 கதை 4

இயேசுவை நோக்கிப்பார்த்தல் - இந்தக் கதை இயேசு வரவேற்கப்படுவதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* இயேசு மிகவும் சிறப்பு வாய்ந்தவர் - அவர் ராஜாதி ராஜா.<br>* கர்த்தராகிய இயேசுவை நம் வாழ்வில் வரவேற்க வேண்டும்.<br>**முக்கிய வசனம்: யோவான் 1: 12**<br>**வேத பாகம்: லூக்கா 19: 28 - 44** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | இந்த சந்தர்ப்பத்தில் கர்த்தராகிய இயேசு சிறப்பு வருகைபுரிந்தவராக இருந்தார் என்பதை விளக்குங்கள். அவர் கடைசியாக எருசலேம் நகருக்குள் நுழைந்து கொண்டிருந்தார், ஏனென்றால் நம்முடைய பாவங்களுக்காக மரிப்பதற்கான தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வேளை அதுவாகும்.இயேசு எவ்வளவு சிறப்பு வாய்ந்தவர் என்பதை மக்கள் அறிய வேண்டும் என்று தேவன் விரும்பினார். பைபிள் அவரை “ராஜாதி ராஜா மற்றும் கர்த்தாதி கர்த்தா” என்று அழைக்கிறது. இந்த முக்கியமான நாளில் மக்கள் அவரைக் கவனிக்கும் விதத்தில் இயேசு எவ்வாறு எருசலேமுக்குள் நுழைவார் என்பதை தேவன் திட்டமிட்டிருந்தார். |
| **கற்றுக்கொடுங்கள்** | * இயேசுவும் அவருடைய சீடர்களும் எருசலேமுக்கு அருகில் வந்தபோது,அவர்களில் இருவரை ஒரு கிராமத்திற்கு செல்லும்படி சொன்னார், அவர்கள் கழுதை கட்டப்பட்டிருப்பதைக் காண்பார்கள் என்றும் கூறினார். அதை அவிழ்த்து அவரிடம் கொண்டுவர வேண்டும் என்றும், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று யாராவது கேட்டால், “இது ஆண்டவருக்குத் தேவை” என்று பதிலளியுங்கள் என்றும் கூறினார். **(லூக்கா 19: 28 - 31)**<br>* சீடர்கள் கழுதையைக் கண்டுபிடித்து அதை இயேசுவிடம் கொண்டு வந்ததை கற்பனை செய்து பாருங்கள். யாராவது முதன்முறையாக அதன்மீது அமர்ந்தால் இளம் கழுதை எப்படி முரண்டுபிடித்திருக்கும்? சீடர்கள் ஆடைகளை ஒரு சேணமாகப் பயன்படுத்த அதன்மீது வைத்தார்கள், பின்னர் கழுதை இயேசுவை அதன் முதுகில் உட்கார அனுமதித்தது. பொதுவாக இப்படி நடக்காது, ஆனால் படைக்கப்பட்ட எல்லாவற்றின்மீது இயேசுவுக்கு அதிகாரம் இருந்தது! **(லூக்கா 19: 32 - 35)**<br>* இயேசு சாலையோரம் சவாரி செய்யத் தொடங்கியபோது,மக்கள் கூட்டம் ஆடைகளை கம்பளமாக சாலையில் விரித்தனர். இப்போது அவர் யார் என்று கூட்டத்திற்குத் தெரியும் - தேவன் அனுப்பிய சிறப்பு மன்னர். ஒரு ராஜா வழக்கமாக போருக்குச் செல்லும் போது குதிரையில் சவாரி செய்கிறார் என்பதை விளக்குங்கள், ஆனால் கழுதை மீது சவாரி செய்வதன் மூலம் இயேசு சமாதானத்தைக் கொண்டுவந்தார் என்பதைக் காட்டினார். மக்கள் மிகுந்த உற்சாகமடைந்து “கர்த்தருடைய நாமத்தினாலே வருபவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்” என்று முழங்கி தேவனைப் புகழ்ந்தனர். **(லூக்கா 19: 36 - 38)**<br>* இயேசு இத்தகைய வரவேற்பைப் பெறுகிறதை விரும்பாத, அவர்மீது கோபமடைந்த மற்றவர்களும் அருகிலேயே இருந்ததைக் குறிப்பிடுங்கள். **(லூக்கா 19: 39 - 40)** இந்த மனிதர்கள் விரைவில் தங்களுடைய சூழ்ச்சியால் அவரைப் பிடித்துக் கொலைசெய்வார்கள் என்று கர்த்தராகிய இயேசு அறிந்திருந்தார்.<br>* கர்த்தராகிய இயேசுவைப் பற்றி ஒரு முக்கியமான தேர்வு நமக்கு இருக்கிறது என்ற சவாலை குழந்தைகளுக்கு முன்வையுங்கள். நாம் அவரை நம் வாழ்வில் வரவேற்க தேர்வு செய்யலாம் அல்லது அவரிடம் “மாட்டேன்” என்று கூறி அவருக்கு இடம் கொடுக்காமல் இருக்கலாம். தம்முடைய குமாரனை நம்முடைய வாழ்வில் அழைக்க தேவன் விரும்புகிறார். அதைச் செய்யும்போது நாம் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாக மாறுகிறோம். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். யோவான் 1: 12. வரவேற்றல், ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நம்புதல் போன்ற வார்த்தைகளை அனைவருக்கும் விளக்குங்கள். பிரதிபெயர்களை (அவரை, அவர்) புரிந்துகொண்டார்கள் என்பதை உறுதிசெய்யுங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | வினாடி-வினாவிற்கு சரியா / தவறா வாக்கியங்களைப் பயன்படுத்தவும்.<br>* இயேசுவும் அவருடைய சீடர்களும் எருசலேமுக்குள் நுழைந்துகொண்டிருந்தார்கள்.<br>* இயேசு தம்முடைய சீடர்களில் 3 பேரை ஒரு கிராமத்திற்கு அனுப்பினார்.<br>* அவர்கள் கழுதை மீது சவாரி செய்தனர்.<br>* இயேசு அதன் முதுகில் அமர்ந்தபோது கழுதை எந்த வம்பும் செய்யவில்லை.<br>* மக்கள் தரையில் கம்பளம் விரித்தார்கள்.<br>* அனைவரும் இயேசுவை வரவேற்றனர்.<br>* இயேசு ராஜாதி ராஜா, அவர் வரவேற்கப்பட வேண்டியவர்.<br>* இயேசுவை நம் வாழ்வில் வரவேற்கும்போது தேவனுடைய குடும்பத்தின் அங்கமாகி விடுகிறோம். |

B 4 கதை 1

இயேசு மரிக்கின்றார் - இந்தக் கதை கர்த்தராகிய இயேசு நமக்காக மரிப்பதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* கர்த்தராகிய இயேசு மோசமாக நடத்தப்பட்டார், மரிப்பதற்குரிய குற்றம் இல்லாதவர் அவர்.<br>* நம்முடைய பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்கவே இயேசு மரித்தார்.<br>**முக்கிய வசனம்: லூக்கா 23: 33**<br>**வேத பாகம்: லூக்கா 23: 1 - 26, 32 - 43** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | பின்வரும் வாசகங்கள் எழுதப்பட்ட சில அட்டைகளை வைத்திருங்கள்: **ஒரு நண்பரால் கைவிடப்படுதல், தவறாக குற்றம் சாட்டப்படுதல், கேலி செய்யப்படுதல், முரட்டுத்தனமாக நடந்துகொள்ளும் ஒருவன்.** அன்றாட வாழ்க்கையில், அல்லது ஒரு சிறிய குழுவில், குழந்தைகள் தங்கள் சொந்த அனுபவங்களைப் பற்றியும், இதுபோன்று நடத்தப்படுவது எப்படி இருக்கும் என்பதைப் பற்றியும் பேசலாம். இவ்வாறு நடத்தப்படுவதை நாம் தடுத்துநிறுத்த விரும்புகிறோம்! இவ்வாறு மோசமா நடத்தப்படுவது எப்படியிருக்கும் என்பதை கர்த்தராகிய இயேசு அறிந்திருந்தார் என்பதை விளக்குங்கள். மக்கள் இந்தக் காரியங்கள் அனைத்தையும் அவருக்குச் செய்தார்கள், மோசமாக நடத்தினார்கள். அவர் ஏன் இப்படி பாடுபட்டார் என்பதை இன்று நாம் கண்டுபிடிப்போம். |
| **கற்றுக்கொடுங்கள்** | (நீங்கள் ஒரு பள்ளியில் கற்பிக்கிறீர்கள் என்றால், நீங்கள் கற்பிக்கும் நிகழ்வுகளைக் கண்டுபிடிக்க ஒரு கிடைமட்ட கோடு இருப்பது உதவியாக இருக்கும். **ஒரு சிறப்பு இரவு உணவு, தோட்டத்தில் ஜெபம் செய்தல், எதிரிகளால் கைது செய்யப்படுதல், பிலாத்து கேள்வி கேட்டல், கோபமடைந்த கூட்டம், சிலுவையில் அறையப்பட கொண்டுசெல்லுதல், மூன்று சிலுவைகள், மன்னிக்கப்பட்ட திருடன்** போன்ற எளிய வரிகளை அட்டையில் தலைப்புகளாக எழுதி குழந்தைகளுக்கு காண்பிக்க, அவை விவரங்களையும் சம்பவங்களின் தொடர்ச்சியையும் நினைவில் வைத்துக்கொள்ள உதவும்.)<br><br>* எருசலேமுக்குள் நுழைந்ததை குழந்தைகளுக்கு நினைவுபடுத்த சில கேள்விகளைக் கேளுங்கள். சில நாட்களுக்குப் பிறகு இயேசு அவர் மரிப்பதற்கு முன், அவருடைய சீடர்களுடன் ஒரு சிறப்பு இராவிருந்து சாப்பிட்டார். பின்னர் அவர் ஜெபிப்பதற்காக ஒரு தோட்டத்திற்குச் சென்றார். காட்சியை அமைக்கவும் - இருள், அமைதி, பின்னர் அடிச்சுவடுகளின் சத்தம் மற்றும் இயேசுவை துசெய்வதில் யூதாஸின் பங்கு. இயேசு உணர்ந்த சோகத்தை தெரிவிக்கவும்.<br><br>* அடுத்த நாள், இயேசு ஆளுநராக இருந்த பிலாத்துவிடம் அழைத்துச் செல்லப்பட்டார். **(லூக்கா 23: 1 - 4, 20 - 25)** அவனுடைய அதிகார நிலையை விளக்கி, இயேசுவின் வாழ்க்கையில் அவர் எந்தத் தவறும் காணமுடியவில்லை என்பதை வலியுறுத்துங்கள். கர்த்தராகிய இயேசு முற்றிலும் பாவமற்றவராக இருந்தார். கடைசியில், கோபமடைந்த கூட்டம் விரும்பியதை பிலாத்து செய்து, இயேசுவுக்கு மரண தண்டனை விதித்தான். நமக்கு இது மிகவும் நியாயமற்றது என்று தோன்றுகிறது, ஆனால் அது நம்மை இரட்சிப்பதற்கான தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகும்!<br><br>* இயேசு எருசலேமுக்கு வெளியே அழைத்துச் செல்லப்பட்டார். சிமியோன் என்ற மனிதன் பெரிய சிலுவை மரத்தைச் சுமக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. (லூக்கா 23: 26) அவர்கள் மலையை அடைந்தபோது, வீரர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். அதே நேரத்தில் இயேசுவின் இரு பக்கத்திலும் இரு திருடர்களும் அறையப்பட்டனர். இயேசு சிலுவையில் தொங்கியபோது வீரர்கள் அவரை கேலி செய்தனர், ஒரு திருடன் மிகவும் முரட்டுத்தனமாக இருந்தான். ஆனால் மற்ற திருடன் இயேசு யார் என்பதை உணர்ந்து, தன்னை நினைத்துக்கொள்ளும்படி இயேசுவிடம் கேட்டான். இன்றே, நீ என்னுடன் பரதீசில் இருப்பாய் என இயேசு அவனுக்கு வாக்குறுதி அளித்தார். **(லூக்கா 23: 32 - 43)**<br><br>* இயேசு மரணதண்டனைக்கு உரியவர் அல்லர் என்பதை அந்தத் திருடனைப் போலவே நாமும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்குங்கள். மாறாக, அவர் தேவனுடைய மிகுந்த அன்பைக் காட்டி, நமது பாவங்களுக்குரிய தண்டனையைச் சுமந்து பாடுபட்டு மரித்தார். நம்மை மன்னிக்கும்படி அவரிடம் வேண்டினால், நாமும் ஒரு நாள் பரலோகத்தில் இருப்போம் என்று உறுதியாக நம்பலாம். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **லூக்கா 23: 33,** அல்லது அதன் ஒரு பகுதியை குழந்தைகளின் திறமையைப் பொறுத்து விளக்குங்கள். இயேசு மரித்த மலையின் பெயரை விளக்குங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | தலைப்புகளை கலந்து குழந்தைகள் சரியான கிரமத்தில் அடுக்கட்டும். நீங்கள் ஒரு சிறு குழந்தைகளின் குழுவில் செயல்படுகிறீர்கள் என்றால் வெவ்வேறு அணிகளுக்கான நகலை நீங்கள் வைத்திருக்கலாம், விரைவாக முடிக்கும் அணி வெற்றிபெற்றதாக கருதப்படும். |

## B 4 கதை 2

இயேசுவை நோக்கிப்பார்த்தல் - இந்தக் கதை இயேசு வரவேற்கப்படுவதைப் பற்றியது.

**நாம் அறிந்துகொள்வது:**

* இயேசுவின் மரணம் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டது, ஏனென்றால் நம்முடைய பாவங்களின் தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார்.
* அவர் நமக்கு மிகுந்த அன்பு செலுத்தியதற்காக அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

**முக்கிய வசனங்கள்: 1 கொரிந்தியர் 15: 3 ரு 4**

**வேத பாகம்: லூக்கா 23: 44 - 56**

### அறிமுகப்படுத்துங்கள்

பகல் மற்றும் இரவு பற்றியும், ஒருவர் மற்றவரை எவ்வாறு பின்பற்றுகிறார் என்பதைப் பற்றியும் பேசுங்கள். இரவு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வரும் என நாம் எதிர்பார்க்கிறோம்! தேவன் அதை அப்படித்தான் ஏற்படுத்தியிருக்கிறார். ஆனால் இயேசு இறந்த நாள் வித்தியாசமானது. திடீரென்று எந்த எச்சரிக்கையும் இல்லாமல், மதியம் 12 மணிக்கு, சூரியன் பிரகாசிப்பதை நிறுத்தியது, அங்கு இரவுபோன்று காரிருள் இருந்தது. இது மூன்று மணி நேரம் நீடித்தது. **(லூக்கா 23: 44, 45)** தேவன் இதை ஏன் அனுமதித்தார்?

### கற்றுக்கொடுங்கள்

* இந்த மூன்று மணி நேரத்தில் கர்த்தராகிய இயேசு நம்முடைய பாவத்திற்காக தேவனால் தண்டிக்கப்பட்டார் என்று பைபிள் கூறுகிறது. கடந்த வார கதையில் இயேசு அனுபவித்த வழிகளை நினைவுகூரும்படி குழந்தைகளிடம் கேளுங்கள். அவர் ஏற்கனவே அனுபவித்தவற்றில் கொஞ்சம் புரிந்துகொள்ள முடியும், ஆனால் நம்முடைய பாவத்திற்கான தண்டனையை நம்மால் புரிந்து கொள்ள முடியாது என்பதை விளக்குங்கள். நம்மை நேசித்ததால் இயேசு இதை விருப்பத்துடன் தாங்கிக்கொண்டார், நாம் இரட்சிக்கப்படுவதற்கான தமது தந்தையின் திட்டத்தை நிறைவேற்ற விரும்பினார்.
* கடைசியாக இயேசு ஜெபித்து, தம்முடைய ஆவியை தேவனிடம் ஒப்புக்கொடுத்தார். **(லூக்கா 23: 46)** தம்முடைய பிதா அவரைச் செய்ய அனுப்பிய வேலையை முடித்துவிட்டார் என்று இயேசு கூறுகிறார். அதற்கு மேல் எதுவும் செய்ய வேண்டியதில்லை என்ற அளவுக்கு ஒரு எளிய பணியை முடிப்பதில் திருப்தி ஏற்படுவதைக் குறிப்பிடவும் - எ.கா. ஒரு மாதிரியை உருவாக்குவது. நம்முடைய பாவம் மன்னிக்கப்படுவதற்குத் தேவையான அனைத்தையும் இயேசு செய்திருந்தார். அவர்கள் சார்பாக இயேசு செய்ததற்கு குழந்தைகள் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதின் அவசியம் குறித்து சவால் விடுங்கள்.
* பின்னர் இயேசு மரித்தார். அவரது நண்பர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்பதை ஆராயுங்கள். யோசேப்பு என்ற ஒரு அன்பான நண்பர் பிலாத்துவிடம் சென்று இயேசுவின் உடலைக் கேட்டார். கவனமாக அவர் உடலை சிலுவையிலிருந்து கீழே இறக்கி எடுத்தார், அதைத் துணியால் பொதிந்து ஒரு புதிய கல்லறையில் வைத்தார். கல்லறை ஒரு சிறிய குகை போன்றது என்பதை விளக்குங்கள். பின்னர் நுழைவாயிலின் குறுக்கே ஒரு பெரிய கல்லை உருட்டி மூடினார். **(லூக்கா 23: 50 - 53)**

**பைபிள் டைம் பாடத்தை முடிக்கவும்.**

**காண்பியுங்கள்: FBI -** புகைப்படங்கள் மிகவும் கிரா∴பிக் முறையிலுள்ளன மேலும் இந்த வயதினருக்கு உண்மையில் பொருந்தாது - உவமைகளைப் பயன்படுத்த பரிந்துரைக்கிறோம் - இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரிக்கிறார்.

### கற்றுக்கொள்ளுங்கள்

முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். **1 கொரிந்தியர் 15:3,4.** இளைய குழந்தைகள் முதல் ஐந்து வார்த்தைகளைச் சொல்லாம். வேதவசனங்கள் என்ன என்பதை குழந்தைகள் விளங்கிக்கொண்டார்கள் என்பதை உறுதிப்படுத்துங்கள், கர்த்தராகிய இயேசுவுக்கு நடந்தவை அனைத்தும் பழைய ஏற்பாட்டில் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டவை என்பதை விளக்குங்கள்.

### நினைவில்வையுங்கள்

வினாடி வினாவுக்கு இந்த சரியா / தவறா முறையைப் பயன்படுத்தவும்.

நண்பகலில் இருளத் தொடங்கியது.

* அது நான்கு மணி நேரம் நீடித்தது.
* இருளின் போது,நம்முடைய பாவத்திற்கான தண்டனையை இயேசு அனுபவித்தார்.
* இயேசு மரிப்பதற்கு முன்பு தம் பிதாவிடம் பேசினார்.
* இயேசுவின் நண்பர்கள் அவருக்கு நடந்த அனைத்தையும் புரிந்துகொண்டார்கள்.
* யோசேப்பு படையினரிடம் இயேசுவின் உடலைக் கேட்டார்.
* உடலை மென்துணியால் சுற்றினார்.
* உடலை ஒரு பழைய கல்லறையில் வைத்தார்.

B 4 கதை 3

# இயேசு மீண்டும் உயிரோடு வருகிறார் - இயேசு உயிருடன் இருப்பதை மரியாள் கண்டுகொள்வததைப் பற்றியது!

**நாம் அறிந்துகொள்வது:**

* மரித்து மூன்று நாட்களுக்குப் பிறகு தேவன் இயேசுவை மீண்டும் உயிரோடெழுப்பினார்.
* மரியாள் உயிர்த்தெழுந்த கர்த்தரைக் கண்டுபிடித்தது போலவே, நம்மாலும் முடியும்.

**முக்கிய வசனம்: ரோமர் 10: 9**
**வேத பாகம்: யோவான் 20: 1 - 18**

## அறிமுகப்படுத்துங்கள்

இயேசு சிலுவையில் மரித்ததைப் பற்றி நாம் கடைசி கதையில் அறிந்துகொண்டோம். நமக்கு இது நற்செய்தி என்று விளக்குங்கள்! சிலுவையில் இயேசுவின் மரணத்தின் மூலம், நம்முடைய பாவங்களை மன்னிக்க தேவனால் ஒரு வழியை வழங்க முடிந்தது. தேவனுடைய அற்புதமான திட்டம் முடிவடைந்தது! ஆனால், இயேசுவின் நண்பர்களோ வருத்தமும் சோகமும் அடைந்தார்கள். இப்போது பைபிளின் உதவியுடன் நாம் புரிந்துகொள்கிறோம், ஆனால் அவர்களால் அந்த விசயங்களை புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அவர்கள் நீண்ட நேரம் சோகமாக இருக்க வேண்டியதில்லை! இந்தக் கதை நித்திய மகிழ்ச்சியான முடிவைக் கொண்டுள்ளது!

## கற்றுக்கொடுங்கள்

* இயேசுவின் அடக்கம் மற்றும் பெரிய கல்லால் மூடப்பட்ட கல்லறைப் பற்றி குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். அன்று இயேசு மரித்த மூன்றாம் நாளான ஞாயிற்றுக்கிழமை அதிகாலை. இயேசுவிடம் அன்பான மரியாள், கல்லறையைப் பார்க்கச் சென்றாள். கல் ஒரு பக்கத்திற்கு உருட்டப்பட்டு கல்லறை காலியாக இருந்ததைக் கண்டு அவள் ஆச்சரியமடைந்ததை விவரிக்கவும். பேதுருவையும் யோவானையும் கண்டு இதைச் சொல்ல மரியாள் ஓடினாள். அவள் சொன்ன வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். **(யோவான் 20: 1 - 2)**
* இந்த செய்தியால் பேதுருவும் யோவானும் உற்சாகமாகி, தங்களால் முடிந்தவரை வேகமாக ஓடினார்கள். யோவான் முதலில் கல்லறையைப் பார்த்தான், ஆனால் பேதுரு அங்கு வந்ததும், அவன் உள்ளே சென்றான்! அங்கு இயேசுவின் உடலில் சுற்றப்பட்டிருந்த துணி துண்டுகள் இருந்தன. பின்னர் யோவான் உள்ளே நுழைந்தான். என்ன நடந்தது என்று உடனடியாக யோவானுக்குத் தெரியும். இயேசு உயிருடன் இருக்கிறதை அவன் அறிந்தான்! **(யோவான் 20: 3 - 9)**
* ஆனால் மரியாள் இன்னும் குழப்பத்தில் இருந்தாள். பேதுருவும் யோவானும் சென்ற பிறகு அவள் தோட்டத்திலேயே இருந்தாள். அவள் அழுதுகொண்டு கல்லறையின் உள்ளே ஒரு முறை பார்த்-தாள். இந்த நேரத்தில், மரியாளுக்கு மற்றொரு ஆச்சரியம் இருந்தது. இரண்டு தேவதூதர்களையும், அவர்களுடன் அவளுடைய உரையாடலையும் தொடர்புபடுத்தி விவரிக்கவும். **(யோவான் 20: 10 - 13)**
* பின்னர் மரியாள் திரும்பிப் பார்த்தாள், தோட்டத்தில் ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தது தெரிந்தது. உரையாடலை தொடர்புபடுத்திப் பாருங்கள். அந்த நேரத்தில் அறியாத அந்த நபர் அவள் பெயரை சொன்னார். “மரியாள்!” திடீரென்று அவள் குரலை அடையாளம் கண்டுகொண்டாள். அது அவளுடைய எஜமான், கர்த்தராகிய இயேசு! மரியாள் இப்போது எப்படி உணர்ந்திருப்பாள்? மரியாள் மகிழ்ச்சியால் நிறைந்தாள்! அவள் தானே கர்த்தரைப் பார்த்தாள். அவர் உண்மையில் உயிருடன் இருந்தார்! இரண்டாவது முறையாக மரியாள் சீடர்களைக் காணப் புறப்பட்டாள். அவள் அவர்களுக்கு என்ன இந்த நேரத்தில் சொல்வாள்? **(யோவான் 20: 14 - 18)**
* இயேசுவை ஒரு நண்பராக கொண்டிருப்பது பற்றியும் அவர் விரும்பும் அனைத்தையும் பற்றி குழந்தைகளுக்கு சவால் விடுங்கள் - அவருடைய மன்னிப்பு, வல்லமை மற்றும் மகிழ்ச்சி.

## கற்றுக்கொள்ளுங்கள்

முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **ரோமர் 10: 9.** இயேசுவை கர்த்தர் என்று நாம் நம்புகிறோம் என்பதை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவதே “அறிக்கைசெய்தல்” என்பதை விளக்குங்கள். நம்முடைய பாவங்களுக்கான தண்டனையிலிருந்து நாம் இரட்சிக்கப்படுவதற்காக தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று நாம் நம்ப வேண்டும் என்று இந்த வசனம் நமக்குக் கற்பிக்கிறது.

## நினைவில்வையுங்கள்

கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.

* முதலில் கல்லறைக்குச் சென்றது யார்?
* மரியாள் கவனித்தபோது கல் எவ்வாறு இருந்தது?
* அவள் யாரிடம் சென்று சொன்னாள்?
* முதலில் கல்லறைக்குள் நுழைந்தது யார்?
* கல்லறையில் உடல் இல்லை என்பதை உணர்ந்த யோவான் என்ன செய்தார்?
* மரியாள் தனியாக இருந்தபோது கல்லறையில் என்ன பார்த்தாள்?
* தேவதூதர்கள் மரியாளிடம் என்ன கேட்டார்கள்?
* மரியாளுடன் தோட்டத்தில் இருந்தவர் யார்?

B 4 கதை 4

இயேசு மீண்டும் வரப்போகிறார் - இந்தக் கதை கர்த்தராகிய இயேசு மீண்டும் வருவதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* கர்த்தராகிய இயேசு பரலோகத்திற்குச் சென்றார், இன்னும் அங்குதான் இருக்கிறார்.<br>* அவருடைய வருகைக்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும்.<br>**முக்கிய வசனம்: அப்போஸ்தலர் 1: 11**<br>**வேத பாகம்: லூக்கா 24: 50 - 53, அப்போஸ்தலர் 1: 4 - 12** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | ஒரு காட்சியை உதாரணமாக காட்டி விடைபெறுவது பற்றி பேசுங்கள் - எ.கா. ஒரு உறவினர் உங்களுடன் தங்கியிருக்க வந்து, வீட்டிற்கு திரும்பிச் செல்லவேண்டிய சூழ்நிலை, அல்லது பள்ளியில் உங்கள் வகுப்பில் உள்ள ஒருவர் பிறிந்து தொலைவிலுள்ள இடத்திற்கு மாறிச் செல்லவேண்டிய சூழ்நிலை. அல்லது உங்கள் சொந்த அனுபவத்திலிருந்து ஒரு உண்மையான சம்பவத்தை சொல்லுங்கள். ஒருவேளை அந்த நபர் சிறிது காலம் கழித்து திரும்பி வருவார் அல்லது உங்களோடு தொடர்பில் இருப்பார் என்று உறுதியளிக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு வாக்குறுதி பிரிவை எளிதாக்குகிறது! |
| **கற்றுக்கொடுங்கள்** | * இயேசுவின் சீடர்கள் அவர் மீண்டும் உயிர்த்தெழுந்த பிறகு அவருடன் சில அற்புதமான நேரங்களைக் கழித்தனர். இப்போது அவர் ஏன் இறந்தார் என்பதைப் பற்றி மேலும் புரிந்து கொண்டனர். சுமார் ஆறு வாரங்களுக்குப் பிறகு, அவர் பதினொரு சீடர்களை ஒலிவ மலை என்று அழைக்கப்படும் ஒரு மலைக்கு கொண்டுபோனார். அவர் மீண்டும் பரலோகத்திற்குச் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அவர் அவர்களுக்கு விளக்கினார். அவர்கள் தனியாக இருக்க மாட்டார்கள், ஏனென்றால் விரைவில் பரிசுத்த ஆவியானவர் என்ற சிறப்பு உதவியாளர் அவர்களிடம் வருவார். திடீரென்று, இயேசு அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, அவர் பூமியிலிருந்து வானத்துக்கு எடுக்கப்பட்டார். அவர்கள் எப்படி வானத்தை நோக்கிப் பார்த்தார்கள் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள், ஆனால் அப்போதே இயேசு ஒரு மேகத்தால் அவர்களுடைய பார்வையில் இருந்து மறைக்கப்பட்டார். இயேசு பரலோகத்திற்கு ஏறினார் என்ற உண்மையை நீங்கள் குறிப்பிடலாம். (நிலை 2) அவர்கள் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்பதை ஆராயுங்கள் - குழப்பமடைந்தார்களா? ஆச்சரியப்பட்டார்களா? சோகமடைந்தார்களா? **(அப்போஸ்தலர் 1: 8 - 9)**<br>* அந்த நேரத்தில் இரண்டு தேவதூதர்கள் தோன்றி, அவர்கள் ஏன் வானத்தைப் அண்ணாந்து பார்க்கி-றார்கள் என்று சீடர்களிடம் கேட்டார்கள். இயேசு பரத்துக்கு ஏறிப்போனதைப்போலவே மீண்டும் பூமிக்கு இறங்கி வருவார் என்று தேவதூதர்கள் சொன்னார்கள். **(அப்போஸ்தலர் 1: 10, 11)**<br>* சீடர்கள் மலையில் தங்கக்கூடாது, மாறாக அவர்கள் எருசலேமுக்குச் சென்று இயேசு வாக்குறுதியளித்த உதவியாளரைப் பெற வேண்டும் என்று அறிந்தார்கள். அவர்கள் சோகமாக இல்லை, ஆனால் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தார்கள்! **(லூக்கா 24: 52)** உங்கள் அறிமுக விளக்கத்துடன் மக்கள் பிரிந்துசெல்வதைப் பற்றிக் கூறுங்கள். இயேசு தம்முடைய வாக்குறுதியை அவர்களிடம் நிறைவேற்றுவார் என்று அவர்கள் நம்பினார்கள் என்பதை விளக்குங்கள், இயேசுவின் வாக்குறுதிகளை நாம் நம்ப வேண்டும்!<br>* கர்த்தராகிய இயேசு இன்றும் பரலோகத்தில் இருக்கிறார், ஆனால் அவரை நேசிப்பவர்கள் அவருடைய வருகைக்காக காத்திருக்கிறார்கள். அது எப்போது சம்பவிக்கும் என்று நமக்குத் தெரியாது, ஆனால் அது நிச்சயம் நடக்கும் என்று நமக்குத் தெரியும் - அவர் தமது வாக்குறுதியைக் காப்பாற்றுவார். தாங்கள் செய்த பாவங்கள் மன்னிக்கப்பட கர்த்தராகிய இயேசுவை நம்புவதன் மூலம், அவர் திரும்பி வருவதற்குத் தயாராக இருக்க வேண்டும் என குழந்தைகளுக்குச் சவால் விடுங்கள். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். அப்போஸ்தலர் 1: 11. இது ஒரு நீண்ட வசனம் -<br>உங்கள் குழுவில் உள்ள குழந்தைகளின் திறமைக்கேற்றபடி வசனத்தின் ஒரு பகுதியைத் தேர்ந்தெடுக்கவும். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* ஒலிவ மலையில் இயேசுவுடன் எத்தனை சீடர்கள் இருந்தனர்?<br>* தம்முடைய சீடர்களிடம் தான் எங்கே போகிறேன் என்று இயேசு சொன்னார்?<br>* அவர்கள் எதைப் பெறுவார்கள் என்று அவர் வாக்குறுதி அளித்தார்?<br>* அவர்கள் பார்வையில் இருந்து அவரை மறைத்தது எது?<br>* தேவதூதர்கள் அவர்களுக்குச் சொன்ன செய்தி என்ன?<br>* சீடர்கள் அடுத்து எங்கு சென்றார்கள்?<br>* இயேசு எப்போது திரும்பி வருவார்?<br>* அவர் யாருக்காக வருகிறார்? |

## B 5 கதை 1

நல்ல சமாரியன் - இந்தக் கதை உங்கள் அயலாரை நேசிப்பதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* நாம் சந்திக்கும் அனைவரிடமும் இரக்கமுடையவர்களாக இருக்க வேண்டும் என்று கர்த்தராகிய இயேசு விரும்புகிறார்.<br>* இயேசு நல்ல சமாரியன் போன்றவர். அவர் நமது இரட்சகராகவும், நண்பராகவும், உதவியா-ளராகவும் இருக்க விரும்புகிறார்.<br>**முக்கிய வசனம்: லூக்கா 10: 27**<br>**வேத பாகம்: லூக்கா 10: 25-37** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | குழந்தைகளுக்கு பிடித்த கதை என்னவென்று சொல்லச் சொல்லுங்கள் (நேரம் அனுமதித்தால், அவர்கள் அதைப் பற்றி ஒரு படம் வரையலாம்). தேவனைப் பற்றி மக்களுக்குப் புரிந்துகொள்ள உதவும் பல கதைகளை இயேசு சொன்னார் என்பதை விளக்குங்கள். எனவே அவரது கதைகளுக்கு சிறப்பு அர்த்தங்கள் இருந்தன. இந்தக் கதைகளில் சிலவற்றைக் கேட்போம். இந்தக் கதைகள் உவமைகள் என்று அழைக்கப்படுகின்றன. குழந்தைகளிடம் அவர்கள் மேற்கொண்ட நீண்ட பயணத்தைப் பற்றி பேசச் சொல்லுங்கள். அவர்கள் எங்கே போனார்கள்? அவர்கள் எப்படி பயணம் செய்தார்கள்? திட்டமிட்டபடி பயணம் நடந்ததா? |
| **கற்றுக்கொடுங்கள்** | ஒருவன் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக பயணத்தில் இருந்த ஒரு மனிதனைப் பற்றிய கதையை இயேசு சொன்னார். தனது முழு இருதயம், ஆத்மா, பெலத்தோடு மற்றும் முழு மனதுடன் தேவனை நேசிக்க வேண்டும் என்றும் அவன் தன்னை நேசிப்பது போலவே அயலாரை நேசிக்க வேண்டும் என்றும் அவன் அறிந்திருந்தான், ஆனால் அதன் அர்த்தம் அவனுக்கு உண்மையில் புரியவில்லை. **(லூக்கா 10: 25-28)**<br>கலந்துரையாடுங்கள் - உங்கள் முழு இருதயம், ஆத்மா, பெலம் மற்றும் மனதுடன் தேவனை நேசிப்பது என்பதின் அர்த்தம் என்ன? உங்கள் அயலாரை நேசித்தல் என்பதின் அர்த்தம் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?<br>* அவனது அயலான் உண்மையில் யார் என்பதைக் காட்ட இயேசு ஒரு கதையைச் சொல்லத் தொடங்கினார். ஒரு மனிதன் எருசலேமிலிருந்து எரிகோவுக்கு பயணம் சென்றான். வழியில் அவன் தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டு குற்றுயிராய் கிடந்தான். **(லூக்கா 10: 29-30)** இந்த மனிதனின் பயணம் மிகவும் கேடாய் முடிந்தது! நீங்கள் ஒரு வரைபடத்தைக் காட்டலாம். பைபிள் காலங்களில் இடங்கள் மற்றும் எருசலேம் மற்றும் எரிகோ இருக்கும் இடங்களை எடுக்க குழந்தைகளை அனுமதிக்கவும்.<br>* அதே வழியில் மூன்று நபர்கள் வந்தனர். முதல் மனிதன் ஒரு ஆசாரியன். அவன் அப்படியே பார்த்துவிட்டு சாலையின் மறுபுறம் நடந்து சென்றான். இரண்டாவது மனிதன் ஒரு லேவியன் (தேவாலயத்தில் உதவிக்காரன்). அவன் வந்து காயமடைந்தவனைப் பார்த்தான், ஆனால் உதவி எதுவும் செய்யவில்லை. **(லூக்கா 10: 31-32)**<br>* மூன்றாவது மனிதன் ஒரு சமாரியன். (யூதர்களும் சமாரியர்களும் நண்பர்கள் அல்ல.) அவன் வந்தபோது காயமடைந்தவனுக்கு, முதலுதவி செய்து, தனது மிருகத்தின் மீது ஏற்றி ஒரு சத்திரத்திற்கு அழைத்துச் சென்றான். சமாரியன் அன்றிரவு அங்கே தங்கியிருந்தான், மறுநாள் காயமடைந்தவனைக் கவனிக்க விடுதியாளருக்கு இரண்டு நாணயங்களைக் கொடுத்தான். **(லூக்கா 10: 33-35)** இயேசு கதையைச் சொல்லி முடித்ததும் அந்த நபரிடம், “இந்த மூவரில் யார் நல்ல அயலான்?” அவனுக்குக் கருணை காட்டியவனே என்று அவன் பதிலளித்தான். நீயும் போய் அப்படியே செய் என்று இயேசு கூறினார். **லூக்கா 10: 36-37)**<br>* கலந்துரையாடுங்கள் - நாம் சந்திக்கும் நபர்களிடம் நாம் கருணை காட்டக்கூடிய ஏதாவது வழிகளைப் பற்றி சிந்திக்க முடியுமா? மக்களிடம் கருணை காட்டுவது எப்போதுமே கடினமா? நம்மீது இரக்கம் காட்டுகிறவர்களிடம் மட்டுமல்ல, எல்லோரிடமும் நாம் கருணை காட்ட வேண்டும் என்று இயேசு கற்பிப்பதை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். கலந்துரையாடுங்கள் - எந்த வகையில் இயேசு நமக்கு நல்ல சமாரியன் போன்றிருக்கிறார் என்பதைப் பற்றி யோசிக்க முடியுமா? (அவர் நமது இரட்சகராகவும், உதவியாளராகவும், நண்பராகவும் இருக்க விரும்புகிறார்.) |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். லூக்கா 10: 27. |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* இயேசு சொன்ன கதைகளை நீங்கள் என்னவென்று அழைக்கிறீர்கள்?<br>* பயணத்தில் அந்த மனிதன் எங்கே போகிறான்?<br>* அவனுக்கு என்ன ஆயிற்று?<br>* எத்தனை பேர் அவனைக் கடந்து சென்றார்கள்?<br>* எந்த மனிதன் உதவி செய்ய நின்றான்?<br>* அவன் என்ன செய்தான்?<br>* அவன் விடுதிக்காரருக்கு எத்தனை நாணயங்களை கொடுத்தான்? |

B 5 கதை 2

காணாமற்போன ஆடு - இயேசு நம்மீது எவ்வளவு கரிசனையுள்ளவராய் இருக்கிறார் என்பதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* நாம் காணாமற்போன ஆடுகளைப் போன்றவர்கள், ஏனென்றால் நாம் தவறான செயல்களைச் செய்துள்ளோம்.<br>* இயேசு நல்ல மேய்ப்பனைப் போன்றவர், அவர் நம்மைக் கண்டுபிடிக்க விரும்புகிறார்.<br><br>**முக்கிய வசனம்: யோவான் 10: 11**<br>**வேத பாகம்: லூக்கா 15: 1-7** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | விவாதிக்க - நீங்கள் எப்போதாவது காணாமல் போய்விட்டீர்களா? அது நடந்தது எப்படி? அப்பொழுது எப்படி உணர்ந்தீர்கள்? உங்களைக் கண்டுபிடித்தவர் யார்? நீங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோது எப்படி உணர்ந்தீர்கள்?<br>இன்றைய கதை ஆடுகளை இழந்த ஒரு மேய்ப்பனைப் பற்றியது என்று குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். ஆடுகளைப் பராமரிக்க ஒரு மேய்ப்பன் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள் என்று அவர்களிடம் கேளுங்கள். (மேய்த்தல், பாதுகாத்தல், கவனித்தல் போன்றவை)<br>செம்மறி ஆடுகள் பெரும்பாலும் அவைகள் இருக்க வேண்டிய இடத்திலிருந்து அலைந்து திரிந்து காணாமல் போகின்றன என்பதை குழந்தைகளுக்கு விளக்குங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * ஒரு நாள் சில வரி வசூலிப்பவர்களும் பாவிகளும் இயேசு சொல்வதைக் கேட்க வந்தார்கள். வேறு சிலர் இயேசு பாவிகளை வரவேற்றதால் முணுமுணுக்கவும் முறையிடவும் தொடங்கினர். அவர்கள் முணுமுணுத்ததை அவர் விரும்பவில்லை, அவர் மக்களுக்கு ஒரு கதையைச் சொல்லத் தொடங்கினார். **(லூக்கா 15: 1-3)** எல்லோரும் தம்மிடம் வர வேண்டும் என்று இயேசு விரும்புகிறார் என்பதை குழந்தைகளுக்கு விளக்குங்கள். அவர்கள் யார் என்பதோ அல்லது அவர்கள் என்ன தவறு செய்தார்கள் என்பதோ முக்கியமல்ல.<br><br>* 100 ஆடுகளைக் கொண்ட ஒரு மேய்ப்பனைப் பற்றி ஒரு கதையைச் சொன்னார். ஒரு நாள் அவைகளில் ஒன்று தொலைந்து போனது. மேய்ப்பன் மற்ற எல்லா ஆடுகளையும் விட்டுவிட்டு, காணாமல்போன ஒன்றைத் தேடச் சென்றான். அவர் அதைக் கண்டுபிடிக்கும்வரை மகிழ்ச்சியாக இருக்கவில்லை. **(லூக்கா 15: 4)** நாம் காணாமற்போன ஆடுகளைப் போன்றவர்கள் என்று பைபிள் சொல்கிறது என்று குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். நல்ல மேய்ப்பரான கர்த்தராகிய இயேசு நம்மைக் கண்டுபிடித்து நம்மை பராமரிக்க விரும்புகிறார். இயேசு நம்மீது அக்கறை காட்டும் வழிகளை அடையாளம் காண குழந்தைகளிடம் கேளுங்கள். நீங்கள் அவற்றை எழுதி, அவருடைய பராமரிப்புக்கு நன்றி சொல்லும்படி குழந்தைகளை ஊக்குவிக்க முடியும். (அவர் நம்மீது அக்கறை காட்டிய மிகப் பெரிய வழி, அவருடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததன் மூலமே என்பதை வலியுறுத்துங்கள்.)<br><br>* கடைசியில் அந்த ஆட்டைக் கண்டதும் அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அவன் ஆட்டை தூக்கி, தனது தோள்கள்மீது வைத்து அதை வீட்டிற்குக் கொண்டு சென்றான். தொலைந்துபோன தனது ஆட்டைக் கண்டுபிடித்ததால் அவன் வீட்டிற்கு வந்ததும் தனது நண்பர்களையும் அயலார் அனைவரையும் அழைத்துக் கூடிவரச்செய்தான். **(லூக்கா 15: 5-6)** காணாமற்போன ஆட்டினைக் கண்டதும் அம்மனிதன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்ததைப் போலவே, இயேசுவில் நம்பிக்கைவைத்து, நாம் செய்த தவறான காரியங்களுக்கு மன்னிப்பு கேட்கும்போது பரலோகத்தில் உண்மையான மகிழ்ச்சி ஏற்படுகிறது என்பதை குழந்தைகளிடம் சொல்லுங்கள். ஆடு காணாமல் போவது, மேய்ப்பன் தனது ஆட்டினைத் தேடுவது, பின்னர் மேய்ப்பன் நண்பர்களுடன் கொண்டாடுவது ஆகியவற்றை ஒரு எளிய முறையில் நடித்துக்காட்டுவதன் மூலம் கதையை மேலும் வலுப்படுத்தலாம். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். **யோவான் 10: 11.** |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* சிலர் ஏன் மகிழ்ச்சியாக இல்லை?<br>* மேய்ப்பனுக்கு எத்தனை ஆடுகள் இருந்தன?<br>* காணாமல் போனது எத்தனை?<br>* மேய்ப்பன் என்ன செய்தான்?<br>* அவன் ஆடுகளை வீட்டிற்கு எப்படி கொண்டு சென்றான்?<br>* அவன் வீட்டிற்கு வந்ததும் என்ன செய்தான்?<br>* ஆடுகளைப் போன்றவர் யார்? |

B 5 கதை 3

காணாமற்போன மகன் - இந்தக் கதை தவறு செய்ததற்காக வருந்துவதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* நாம் செய்த தவறான காரியங்களுக்காக மனம்வருந்துகிறோம் என்று நாம் சொல்ல வேண்டும் என தேவன் விரும்புகிறார்.<br>* நாம் மனம்வருந்துகிறோம் என்று அவரிடம் சொல்லும்போது தேவன் எப்போதும் நம்மை மன்னிப்பார்.<br><br>**முக்கிய வசனம்: லூக்கா 15: 24**<br>**வேத பாகம்: லூக்கா 15: 11-24** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | மன்னிப்பு என்ற கருத்தை விளக்க குழந்தைகளுக்கு ஒரு எளிய சிறுகதையைச் சொல்லுங்கள் எ.கா. ஒரு நாள் ஜேன் மற்றும் சாம் ஒன்றாக விளையாடிக் கொண்டிருந்தனர். சாம் விரும்பிய பந்தை ஜேன் விளையாட ஆரம்பித்தாள். சாம் வருத்தப்பட்டான். அவன் ஜேனிடமிருந்து பந்தைப் பறித்து அவளைக் கீழே தள்ளினான். ஜேன் அழ ஆரம்பித்தாள்.விவாதிக்க - ஜேன் ஏன் அழுகின்றாள்? சாம் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்? ஜேன் அவனை மன்னிக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களா?இன்றைய பைபிளின் கதை மன்னிப்பைப் பற்றியது என்று குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * இயேசு மற்றொரு கதையைச் சொன்னார். ஒரு மனிதனுக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். ஒரு நாள் தனக்குச் சேரவேண்டிய சொத்தைத் தரவேண்டும் என தந்தையிடம் இளைய மகன் கேட்டான். தந்தை அவனுக்குச் சேரவேண்டிய பணத்தை கொடுத்தார். மகனும் தந்தையும் எப்படி உணர்ந்திருப்பார்கள் என்பதைப் பற்றி விவாதிக்கவும். **(லூக்கா 15: 11-12)**<br>* கூடிய சீக்கிரமே, மகன் தனது பைகளைக் கட்டிக்கொண்டு நீண்ட பயணத்தை மேற்கொண்டான். அவன் தொலைவில் இருந்தபோது தனது பணத்தை மோசமான வழிகளில் வீணடித்தான். பின்னர் அந்த தேசத்தில் பஞ்சம் வந்தது. அந்த இளைஞனிடம் பணம் இல்லை, உதவிக்கு யாரும் வரவில்லை. அவன் பன்றிகளை மேய்க்கும் ஒரு வேலை பெற வேண்டியிருந்தது. சில நேரங்களில் அவன் மிகவும் பசியுடன் இருந்ததால், பன்றியின் தீனியைச் சாப்பிட நேரிட்டது. **(லூக்கா 15: 13-16)** கலந்துரையாடுங்கள் - தனக்கு எதுவும் மிச்சமில்லை என்பதை உணர்ந்தபோது மகன் எப்படி உணர்ந்தான் என்று நினைக்கிறீர்கள்? அவன் என்ன செய்திருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?<br>* ஒரு நாள் அவன் வீட்டைப் பற்றி சிந்திக்கத் தொடங்கினான். அங்குள்ள வேலைக்காரர்கள் திருப்தியாய் சாப்பிட போதுமானது இருப்பதை அவன் உணர்ந்தான். அவன் தனது தந்தையின் வீட்டிற்குச் செல்லவும், தந்தை தன்னை மன்னிக்கவும், அவருடைய வேலைக்காரர்களில் ஒருவனாக தன்னை ஏற்றுக்கொள்ள முடியுமா என கேட்கவும் முடிவு செய்தான். (லூக்கா 15:17-19) கலந்துரையாடுங்கள் - மகன் மன்னிக்கப்படுவதற்கு தகுதியானவன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? தந்தை அவனை மன்னிப்பார் என்று நினைக்கிறீர்களா?<br>* அவன் வீட்டிற்கு பயணம் மேற்கொண்டான். அவன் இன்னும் நீண்ட தூரத்தில் வரும்போதே தந்தை அவன் வருவதைக் கண்டார். அவனது தந்தை ஓடிச்சென்று அவனை முத்தமிட்டார். மகன் வருந்துகிறேன் என்று சொல்ல ஆரம்பித்தான், ஆனால் அவனுடையது தந்தை அவனைக் குறுக்கிட்டார். அவர் ஊழியர்களை அழைத்து அவனுக்கு சிறந்த அங்கி, ஒரு மோதிரம் மற்றும் செருப்பை தருமாறு கூறினார், தனது மகன் வீட்டிற்கு வந்ததைக் கொண்டாட ஒரு பெரிய விருந்தை ஏற்பாடு செய்தார். **(லூக்கா 15: 20-24)**<br>* கலந்துரையாடுங்கள் - வீடு திரும்பியதும் மகன் எப்படி உணர்ந்தான் என்று நினைக்கிறீர்கள்? நாம் தவறான காரியங்களைச் செய்ததால் நாம் அந்த மகனைப் போன்றவர்கள் என்பதை குழந்தைகளுக்கு விளக்குங்கள். தேவன் பிதாவைப் போன்றவர். நாம் அவரிடம் வந்து மன்னிக்கும்படி கேட்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். லூக்கா 15: 24. தனது மகனுக்கு என்ன நேர்ந்தது என்று தந்தைக்குத் தெரியமலிருந்தது - அவன் இறந்துவிட்டதைப் போல தோன்றியது. ஆனால் அவன் இப்போது திரும்பிவந்திருக்கிறான், அவன் நலமாகவும் உண்மையில் உயிரோடும் இருக்கிறான்! |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* அந்த மனிதனுக்கு எத்தனை மகன்கள் இருந்தார்கள்?<br>* இளைய மகன் தன் தந்தையிடம் என்ன கேட்டான்?<br>* மகன் தனது பணத்தை என்ன செய்தான்?<br>* அவனுக்கு என்ன வேலை கிடைத்தது?<br>* அப்போது அவன் என்ன செய்ய முடிவு செய்தான்?<br>* மகன் வீட்டிற்கு வருவதைக் கண்ட அவனது தந்தை என்ன செய்தார்?<br>* தந்தை மகனுக்கு என்ன கொடுத்தார்?<br>* கதையில் தந்தை யார்? |

B 5 கதை 4

விதைப்பவன் - இந்தக் கதை தேவனுடைய வார்த்தையுடன் நாம் என்ன செய்கிறோம் என்பதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* பைபிள் என்பது தேவனுடைய வார்த்தையாகும்.<br>* நாம் நல்ல நிலத்தைப் போல இருக்கவும், பைபிளில் அவர் நமக்குச் சொல்வதை நம்பவும் வேண்டும் தேவன் விரும்புகிறார்.<br>**முக்கிய வசனம்: மாற்கு 4: 20**<br>**வேத பாகம்: மாற்கு 4: 1-20** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | கலந்துரையாடல் - நீங்கள் எப்போதாவது ஒரு செடியை வளர்க்க முயற்சி செய்திருக்கிறீர்களா? நீங்கள் என்ன வளர்த்தீர்கள்? செடி வளர என்னத் தேவை? இது ஒரு வலுவான தாவரமாக வளர்ந்ததா அல்லது செத்ததா? அல்லது ஒரு சிறிய குழுவுடன் நீங்கள் வேறுபட்ட விதைகளைக் காட்டலாம்.<br>இன்றைய கதை சில பயிர்களை வளர்க்க முயன்ற ஒரு விவசாயியைப் பற்றியது என்பதை குழந்தைகளுக்கு விளக்குங்கள். |
| **கற்றுக்கொடுங்கள்** | * இயேசு சொல்வதைக் கேட்க ஏராளமான மக்கள் வந்தார்கள். அது பெருங்கூட்டமாக இருந்தது, அதனால் இயேசு கடலிலிருந்த ஒரு படகில் ஏறி அமர்ந்து, கரையிலுள்ள மக்களுக்கு போதித்தார். அவர்களுக்கு இன்னொரு கதையும் கற்றுக் கொடுத்தார். **(மாற்கு 4: 1-2)** கலந்துரையாடுங்கள் - எல்லோரும் இயேசுவின் கதைகளைக் கேட்க விரும்பினார்கள் என்று ஏன் நினைக்கிறீர்கள்? அந்தக் காலத்தில் நீங்கள் வாழ்ந்திருந்தால் அவருடைய கதைகளைக் கேட்க விரும்பியிருப்பீர்கள் என்று நினைக்கிறீர்களா?<br>* ஒரு விவசாயி விதைகளை நிலத்தில் தூவியிருந்தார். விதை நான்கு வெவ்வேறு வகையான நிலத்தில் விழுந்தது. அவற்றில் சில வழியோரம் விழுந்து பறவைகளால் சாப்பிடப்பட்டன, அதனால் அது வளரவில்லை. சில பாறையான பரப்பில் விழுந்தன. அது நல்ல வேர்களை விட முடியவில்லை, அதனால் அது விரைவில் செத்தது. சில முட்கள் மத்தியில் விழுந்தன, முட்களோ அதை நெருக்கின. நல்ல நிலத்தில் சில விதை விழுந்தது. அது நல்ல விளைச்சல் கொடுத்தது. **(மாற்கு 4: 3-9)** இந்தக் கதையில் உள்ள விதை போன்றது தேவனுடைய வார்த்தை என்று குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். கலந்துரையாடுங்கள் - தேவனுடைய வார்த்தை என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? இந்தக் கதையில் விதை தேவனுடைய வார்த்தையை குறிக்கிறது என்று குழந்தைகளுக்கு சொல்லுங்கள். தேவனுடைய வார்த்தைதான் பைபிள். தேவனுடைய வார்த்தையை நாம் கேட்க விரும்பினால் பைபிளைப் படிக்க வேண்டும் என்பதை விளக்குங்கள்.<br>* இயேசு இந்த உவமையை விளக்கினார். வழியருகே விழுந்த விதையைப் பறவைகள் சாப்பிட்டன, அதுபோல மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்கிறார்கள், ஆனால் சாத்தான் அதைப் பறிக்கிறான். பாறை மீது விழுந்த விதை, மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போது இயேசுவைப் பின்பற்றுவோம் என்று சொல்வதைப் போன்றது, ஆனால் கடினமான காலம் வந்தவுடன் அவர்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுவார்கள். முட்களிடையே விழுந்த விதை நெருக்கப்படுவது, தேவனுடைய வார்த்தையைக் கேட்பவர்கள் ஆனால் அவர்கள் கர்த்தராகிய இயேசுவை நினைப்பதை விட்டு பணத்தையும் சொத்தையும் அதிகம் நினைக்கும் நபர்களைப் போன்றது. நல்ல நிலத்தில் விழுந்த விதை மக்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதை ஏற்றுக்கொண்டு, உறுதியுள்ள கிறிஸ்தவர்களாக வளர்வதைப் போன்றது. (மாற்கு 4: 13-20) நாம் நல்ல நிலத்தைப் போல இருக்க வேண்டும், அவருடைய வார்த்தையாகிய பைபிளை நாம் நம்ப வேண்டும் என தேவன் விரும்புகிறார் என்பதை விளக்குங்கள். கலந்துரையாடுங்கள் - நாம் எப்படி நல்ல நிலமாய் இருக்க முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **மாற்கு 4: 20.** ஒவ்வொரு சொற்றொடரையும் நினைவில் கொள்ள குழந்தைகளுக்கு உதவ நீங்கள் செயல்களைப் பயன்படுத்தலாம் எ.கா. விதைத்தல் = தூவுதல், கேளு = கையை காதோடு வைப்பது, ஏற்றுக்கொள்ளுதல் = இதயத்தை சுட்டிக்காட்டல், உற்பத்தி = கைகள் ஒன்றாக மேல்நோக்கி விரித்து காண்பித்தல். எண்களை காற்றில் எழுதலாம். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* மக்களுக்கு கற்பித்தபோது இயேசு எங்கே இருந்தார்?<br>* விவசாயி என்ன செய்தான்?<br>* முதல் வகையான நிலம் எது?<br>* இரண்டாவது வகையான நிலம் எப்படி இருந்தது?<br>* மூன்றாவது வகையான நிலம் எப்படி இருந்தது?<br>* நான்காவது வகையான நிலம் எப்படி இருந்தது?<br>* பயிர்களை வளர்ப்பதற்கு எந்த நிலம் சிறந்தது?<br>* விதை எதைப் போன்றது? |

B 6 கதை 1

கனவுகாணும் வாலிபன் - இந்தக் கதை யோசேப்பின் விசித்திரமான கனவுகளைப் பற்றியது.

**நாம் அறிந்துகொள்வது:**

* யோசேப்பு தனது எதிர்காலத்தைப் பற்றி விசித்திரமான கனவுகளைக் கண்டிருந்தான்.
* தேவன் யோசேப்பின் வாழ்க்கைக்கு ஒரு திட்டத்தை வைத்திருந்தார், நம்முடைய வாழ்க்கையைக் குறித்தும் அவரிடம் ஒரு திட்டம் உள்ளது.

**முக்கிய வசனம்: ஆதியாகமம் 37: 8**

**வேத பாகம்: ஆதியாகமம் 37: 1-11**

## அறிமுகப்படுத்துங்கள்

யோசேப்புக்கு பதினொரு சகோதரர்கள் இருந்தனர். குழந்தைகளை தங்கள் சகோதர சகோதரிகளைப் பற்றி பகிர்ந்துகொள்ளச் சொல்லுங்கள். அவர்களுக்கு எத்தனை சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள்? இவ்வளவு பெரிய குடும்பத்தில் வளர்வது எப்படி இருந்திருக்கும் என்பதைப் பற்றி விவாதிக்கவும்.

## கற்றுக்கொடுங்கள்

* யோசேப்பின் தந்தை யாக்கோபு கானான் தேசத்தில் வசித்து வந்தார். யோசேப்பிற்கு 17 வயது. சகோதரர்கள் தந்தையின் ஆடுகளை கவனிப்பதில் உதவிசெய்தான். ஒரு நாள் அவர்கள் ஏதோ தவறு செய்வதைக் கண்டான். அதைப் பற்றி அவன் தனது தந்தையிடம் கூறினான். **(ஆதியாகமம் 37: 1-2)**
* யாக்கோபு மற்ற மகன்களை விட யோசேப்பை அதிகமாக நேசித்தார், ஏனெனில் அவன் தனது முதுமையில் பிறந்த மகன். யாக்கோபு யோசேப்புக்குப் பலவண்ண அழகிய அங்கியைத் தயாரித்தார். இதைக் கண்டபோது யோசேப்பின் சகோதரர்கள் மிகவும் பொறாமைப்பட்டனர். அவர்கள் அவனை வெறுத்தனர்! **(ஆதியாகமம் 37: 3-4)** 'பொறாமை' என்ற வார்த்தையைப் பற்றி குழந்தைகளுடன் விவாதிக்கவும். பொறாமைப்படுவது என்றால் என்ன? நீங்கள் எப்போதாவது பொறாமைப்பட்டிருக்கிறீர்களா? ஏன் சகோதரர்கள் யோசேப்பின்மீது பொறாமைப்பட்டதாக நீங்கள் நினைக்கிறீர்களா?
* யோசேப்புக்கு ஒரு கனவு வந்தது. அவனும் அவனது சகோதரர்களும் வயல்களில் வேலை செய்வதுபோன்று கனவு கண்டான், மேலும் அவர்கள் கதிர்களைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். யோசேப்பின் கதிர்கற்று நடுவே நேராக எழுந்து நிற்க சகோதரர்களின் கதிர்கற்றுகள் வந்து அதை வணங்கின.
* இந்தக் கனவு யோசேப்பிற்கு எதிர்காலத்தில் அவனுக்கு நடக்கும் காரியத்தைப் பற்றி ஒரு சிறப்பு அர்த்தத்தைக் கொண்டுள்ளது என்பதை குழந்தைகளுக்கு விளக்குங்கள். இந்தக் கனவின் அர்த்தம் என்னவென்று நினைக்கிறார்கள் என்று குழந்தைகளை விவாதிக்கச் சொல்லுங்கள். அவனது கனவுகள் மற்றும் அவனது வார்த்தைகளால் சகோதரர்கள் அவனை இன்னும் அதிகம் வெறுத்தனர். **(ஆதியாகமம் 37: 5-8)**
* யோசேப்பு இதற்கு மிகவும் சமமான அர்த்தமுடைய மற்றொரு கனவு கண்டான். இந்த நேரத்தில் சூரியன், சந்திரன் மற்றும் பதினொரு நட்சத்திரங்கள் அவனை வணங்குவதைக் கண்டான். இப்போது அவனது தந்தை கூட அவன் மீது கோபமடைந்தார். அவர், "நானும் உன் தாயும் உன் சகோதரர்களும் வந்து உன்னை வணங்குவோமா?" என்று கேட்டார். **(ஆதியாகமம் 37: 9-10)**
* யோசேப்பின் சகோதரர்கள் இன்னும் பொறாமை கொண்டனர், ஆனால் அவனது தந்தை கனவுகளைப் பற்றி சிந்தித்துக்கொண்டே இருந்தார். **(ஆதியாகமம் 37: 11).** யோசேப்பினுடைய வாழ்க்கையின் ஆரம்பத்தில் இருந்தே தேவன் ஒரு திட்டத்தை வைத்திருந்தார் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுங்கள். தேவன் நம் வாழ்வில் கூட ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார்.

## கற்றுக்கொள்ளுங்கள்

முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **ஆதியாகமம் 37: 8.** யோசேப்பின் சகோதரர்கள் அவனது கனவுகளின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டனர். அவர்கள் அவனைப் பார்த்து பொறாமைப்பட்டு அவனை வெறுத்தார்கள் என்பதை விளக்குங்கள்.

## நினைவில்வையுங்கள்

கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.

* இந்தக் கதையில் யோசேப்பின் வயது என்ன?
* யாக்கோபு யோசேப்புக்கு என்ன பரிசு கொடுத்தார்?
* யோசேப்பின் சகோதரர்கள் அவனைப் பார்த்து ஏன் பொறாமைப்பட்டார்கள்?
* பொறாமை என்றால் என்ன?
* பொறாமைப்படுவது சரியானது என்று நினைக்கிறீர்களா?
* யோசேப்பு தனது முதல் ∴ இரண்டாவது கனவில் எதைப் பற்றி கனவு கண்டான்?
* யோசேப்பின் கனவுகள் எதைக் குறிக்கின்றன?
* ஆரம்பத்தில் இருந்தே யோசேப்பின் வாழ்க்கையை திட்டமிட்டவர் யார்?

B 6 கதை 2

வெறுக்கப்பட்ட சகோதரன் - இந்தக் கதை யோசேப்பு தனது சகோதரர்களால் விற்கப்படுவதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* யோசேப்பை அவனது சகோதரர்கள் அடிமையாக விற்றனர்.<br>* நம்முடைய பாவங்களை நாம் தேவனிடமிருந்து மறைக்க முடியாது.<br><br>**முக்கிய வசனம்: எண்ணாகமம் 32: 23**<br>**வேத பாகம்: ஆதியாகமம் 37: 12-36** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | யோசேப்பு செய்ததைப் போல பெற்றோருக்காக வேலைகளைச் செய்ய வேண்டுமா என்று குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>முந்தைய கதையை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். யோசேப்பின் சகோதரர்கள் அவனை ஏன் வெறுத்தார்கள்? இன்றைய கதையில், ஆடுகளை மேய்ப்பதற்காக வீட்டிலிருந்து தூரத்திலிருக்கும் தனது சகோதரர்களை கண்காணிக்கும்படி யோசேப்பின் தந்தை அவனிடம் கேட்டுக் கொண்டார். **(ஆதியாகமம் 37: 12-17)** |
| **கற்றுக்கொடுங்கள்** | * சகோதரர்கள் யோசேப்பு வருவதைக் கண்டார்கள். அவர்கள் அவனை மிகவும் வெறுத்தார்கள், அவனைக் கொல்ல சதி செய்தனர். அப்போது அவனது கனவுகள் என்னவாகும்? ஒரு காட்டு விலங்கு அவனைத் தாக்கியதாக தங்கள் தந்தையிடம் அவர்கள் பொய் சொல்லப் போகிறார்கள். **(ஆதியாகமம் 37: 18-20)** யாரும் கண்டுபிடிக்க மாட்டார்கள், தங்கள் பாவங்களை மறைக்க முடியும் என்று சகோதரர்கள் நினைத்தார்கள். நாம் செய்யும் தவறான காரியங்கள் அனைத்தையும் தேவன் அறிவார்.<br>* யோசேப்பின் மூத்த சகோதரனான ரூபன் இதைச் செய்வதிலிருந்து அவர்களைத் தடுத்தான். அதற்கு பதிலாக அவன் அவர்களிடம் யோசேப்பை ஒரு குழிக்குள் போட்டுவிடும்படி கூறினான். பின்னர் திரும்பி வந்து அவனை மீட்க அவன் திட்டமிட்டான். **(ஆதியாகமம் 37: 21-22)**<br>* யோசேப்பு வந்ததும் அவர்கள் அவனுடைய பலவண்ண அங்கியை கழற்றிவிட்டு அவனை பாழான குழிக்குள் போட்டார்கள். **(ஆதியாகமம் 37: 23-24)**<br>* சிறிது நேரத்திற்குள், அவ்வழியாய் சிலர் கடந்து சென்றனர். அவர்கள் நறுமணப்பொருட்களை எகிப்தில் விற்க கொண்டுசென்றார்கள். சகோதரர்களில் ஒருவனான யூதா கொஞ்சம் பணம் சம்பாதிக்க விரும்பினான். யோசேப்பைக் கொல்வதற்குப் பதிலாக, அவர்கள் யோசேப்பை இந்த மனிதர்களுக்கு விற்கும்படி அவன் பரிந்துரைத்தான். அவர்கள் யோசேப்பை 20 வெள்ளி காசுக்கு விற்றார்கள். அடிமையாக வேலை செய்ய யோசேப்பை அவர்கள் எகிப்துக்கு அழைத்துச் சென்றார்கள். **(ஆதியாகமம் 37: 25-28)** அடிமை என்றால் என்ன அர்த்தம்? யோசேப்பு இப்போது எப்படி உணர்ந்திருப்பான் என்று நினைக்கிறீர்கள்?<br>* சகோதரர்கள் தாங்கள் செய்ததை மறைக்க முயன்றனர். அவர்கள் யோசேப்பின் பலவண்ண அங்கியை எடுத்து அதை ஆட்டின் இரத்தத்தில் நனைத்தனர். அவர்கள் அதை மீண்டும் தங்கள் தந்தையிடம் எடுத்துச் சென்று, அது யோசேப்புடைய அங்கியா என்று கேட்டார்கள். யாக்கோபு அங்கியை அடையாளம் கண்டுகொண்டார். ஒரு கொடிய விலங்கு யோசேப்பை தாக்கிக் கொலை செய்ததாக அவர் நினைத்தார். யாக்கோபு மிகவும் துக்கப்பட்டார், அவரை ஆறுதல்படுத்த முடியவில்லை. **(ஆதியாகமம் 37: 29-35)**<br>* அதேவேளையில், யோசேப்பு எகிப்தில் உயிருடன் இருந்தார். ராஜாவின் இராணுவத்தில் ஒரு சேனைத்தலைவனாக இருந்த போத்திபார் என்ற மனிதனுக்கு அவன் விற்கப்பட்டான். **(ஆதியாகமம் 37: 36)** |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் கற்றுக்கொடுத்து விளக்குங்கள். எண்ணாகமம் 32: 23. குழந்தைகள் 'பாவம்' என்பதன் பொருளைப் புரிந்திருக்கிறார்கள், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதையும் புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை உறுதிசெய்யுங்கள். நம்முடைய எல்லா பாவங்களையும் பற்றி தேவன் அறிந்திருக்கிறார், எல்லா பாவங்களும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதை விளக்குங்கள். நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை கர்த்தராகிய இயேசு சிலுவையில் சுமந்து மரித்தார் என்பதை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* இன்றைய கதையின் ஆரம்பத்தில் யாக்கோபு யோசேப்பை என்ன செய்யச் சொன்னார்?<br>* சகோதரர்கள் யோசேப்பை என்ன செய்ய திட்டமிட்டார்கள்?<br>* யோசேப்பு எத்தனை வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டான்?<br>* சகோதரர்கள் தங்கள் பாவத்தை எவ்வாறு மூடி மறைத்தார்கள்?<br>* யோசேப்புக்கு என்ன நேர்ந்தது என்று யாக்கோபு நினைத்தார்?<br>* யோசேப்புக்கு என்ன நடந்தது என்று தேவனுக்குத் தெரியுமா?<br>* அடுத்ததாக யோசேப்புக்காக தேவன் என்ன திட்டமிட்டுள்ளார் என்று நினைக்கிறீர்கள்? |

B 6 கதை 3

விசுவாசமான கைதி - இந்தக் கதை யோசேப்பு சிறையில் அடைக்கப்பட்டதைப் பற்றியது.

**நாம் அறிந்துகொள்வது:**

* சிறையில் கூட யோசேப்பு நேர்மையானவனாகவும் கடின உழைப்பாளியாகவும் இருந்தான்.
* தேவன் யோசேப்புடன் இருந்தார். அவர் ஒருபோதும் நம்மை விட்டுவிடமாட்டார் அல்லது நம்மை தாழ்ந்துபோக செய்யமாட்டார்.

**முக்கிய வசனம்: ஆதியாகமம் 39: 21**

**வேத பாகம்: ஆதியாகமம் 39: 1-6 ரு19-23**

## அறிமுகப்படுத்துங்கள்

குழந்தைகள் எப்போதாவது தங்கள் குடும்பத்திலிருந்து தூரத்தில் இருந்தார்களா என்று கேளுங்கள். அதை அவர்கள் எப்படி உணர்ந்தார்கள்? யோசேப்பு போத்திபரால் அவனது அடிமையாக வாங்கப்பட்டு தனது குடும்பத்திலிருந்து எப்படி தூரத்திலிருந்தான், அது அவனுக்கு எப்படி இருந்திருக்கும் என்பதை குழந்தைகளுக்கு சுருக்கமாக நினைவூட்டுங்கள். அடிமையாக வேலை செய்ய விற்கப்பட்டு வேறு நாட்டிற்கு வந்த சூழ்நிலையில் யோசேப்பு எப்படி நடந்துகொண்டான் என்பதை ஆராயுங்கள்.

## கற்றுக்கொடுங்கள்

* யோசேப்பு எகிப்துக்குக் கொண்டு வரப்பட்டு போத்திபார் என்பவருக்கு அடிமையாக விற்கப்பட்டான். போத்திபார் ராஜாவின் இராணுவத்தில் ஒரு சேனைத்தலைவனாக இருந்தார். போத்திபர் யோசேப்பு நேர்மையானவன் கடின உழைப்பாளி என்பதைக் கண்டார். தேவன் யோசேப்புடன் இருப்பதை அவர் அறிந்திருந்தார், மேலும் அவர் வீட்டாருக்கு பொறுப்பாக அவனை ஏற்படுத்தினார். **(ஆதியாகமம் 39: 1-4)**

* போத்திபார் வீட்டுக்கு யோசேப்பு பொறுப்பேற்றதிலிருந்து, தேவன் அவருடைய வீட்டை ஆசீர்வதித்தார். அவர் சாப்பிட்ட உணவைத் தவிர வேறு எதைப் பற்றியும் அவர் கவலைப்பட வேண்டியதில்லை. **(ஆதியாகமம் 39: 5-6)** தேவன் யோசேப்புடன் இருந்தார், அவனை கவனித்து வந்தார் என்பதை குழந்தைகளுக்கு நினைவூட்டுங்கள்.

* ஒரு நாள், போத்திபாரின் மனைவி யோசேப்பு செய்யாத ஒரு காரியத்தைப்பற்றி பழிசுமத்தினாள். அவனைப் பற்றி அவள் பொய்களை போத்திபாரிடம் சொன்னாள். போத்திபார் தனது மனைவியை நம்பினார். அவர் மிகவும் கோபமடைந்து யோசேப்பு எந்த தவறும் செய்யவில்லை என்றாலும் அவனை சிறைலடைக்கச் செய்தார். **(ஆதியாகமம் 39: 19-20)** தேவன் யோசேப்பை மறந்துவிட்டாரா?

* ஆனால் தேவன் யோசேப்புடன் இருந்தார், சிறையில் கூட அவனை பராமரித்தார். யோசேப்பு தொடர்ந்து நேர்மையான மற்றும் கடின உழைப்பாளியாக இருந்தான். சிறைச்சாலையின் பராமரிப்பாளர் யோசேப்பை மற்ற அனைத்து கைதிகளுக்கும் பொறுப்பாளராக நியமித்தான். சிறையில் யோசேப்பு என்ன செய்தாலும், தேவன் அதை வெற்றிபெற செய்தார். **(ஆதியாகமம் 39: 21-23)**

* கதையின் இந்த பகுதியில் யோசேப்பு காட்டிய நல்ல குணங்களை சுருக்கமாகக் கூறுங்கள். தேவனை புறக்கணிப்பது யோசேப்புக்கு எளிதானது, ஆனால் யோசேப்பு தொடர்ந்து தேவனைப் பிரியப்படுத்தினான். எதிர்காலத்தில் யோசேப்புக்கு இருக்கும் பொறுப்புகளுக்கு தேவன் அவனைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார். அவர் யோசேப்பை மறக்கவில்லை, அவர் ஒருபோதும் அவனைத் தாழ்த்தமாட்டார்.

## கற்றுக்கொள்ளுங்கள்

முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **ஆதியாகமம் 39: 21.** சில நேரங்களில் தேவனுடைய திட்டமானது கடினமான நேரங்களை உள்ளடக்கியிருக்கலாம். இருப்பினும் தேவன் நம்மை நேசிக்கிறார், அப்போதும் நம்முடன் கூட இருக்கிறார் என்பதை குழந்தைகளுக்குப் புரியவையுங்கள்.

## நினைவில்வையுங்கள்

கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.

* யோசேப்பை எந்த நாட்டுக்கு கொண்டுச்சென்றனர்?
* யோசேப்பை வாங்கியது யார்?
* போத்திபாரின் வேலை என்ன?
* போத்திபார் ஏன் யோசேப்பை தனது வீட்டுக்கு பொறுப்புள்ளவனராக்கினார்?
* யோசேப்பை ஏன் சிறையில் தள்ளினார்?
* யோசேப்பு சிறையில் அடைக்க தகுதியானவரா?
* யோசேப்புடன் இருந்து அவன் செய்த அனைத்தையும் வெற்றிபெறச் செய்தவர் யார்?
* யோசேப்பை ஏன் சிறையில் அடைக்க தேவன் அனுமதித்தார் என்று நினைக்கிறீர்கள்?

B 6 கதை 4

புதிய தலைவன் - இந்தக் கதை யோசேப்பு எகிப்தின் ஆட்சியாளனாக மாறுவதைப் பற்றியது.

| | |
|---|---|
| | **நாம் அறிந்துகொள்வது:**<br>* யோசேப்பு எகிப்து தேசத்தில் ஆட்சியில் இரண்டாவது பதவியில் இருந்தான்.<br>* இந்த சிறப்பு வேலைக்கு தேவன் யோசேப்பைத் தயார் செய்திருந்தார்.<br>**முக்கிய வசனம்: 1 கொரிந்தியர் 10: 13**<br>**வேத பாகம்: ஆதியாகமம் 41: 14-49** |
| **அறிமுகப்படுத்துங்கள்** | குழப்பமான கனவில் இருந்து எப்போதாவது திடீரென்று எழுந்ததுண்டா என்று குழந்தைகளிடம் கேளுங்கள். அது அவர்களுக்கு எப்படி இருந்தது? இந்தக் கதையில், எகிப்தின் ராஜாவான பார்வோன் தனக்குப் புரியாத இரண்டு கனவுகளைக் கண்டான். அவை என்னவென்று அவன் அறிய விரும்பினான்! அவனுக்கு யார் உதவ முடியும்? |
| **கற்றுக்கொடுங்கள்** | * பார்வோன் மிகவும் குழப்பமான கனவுகளைக் கண்டான். அவை என்னவென்று தெரிந்துகொள்ள விரும்பினான். அவனுடைய முதல் கனவு நைல் நதியில் இருந்து ஏழு கொழுத்த மாடுகள் வெளியே வந்ததாக கனவு கண்டான். பின்னர் ஏழு ஒல்லியான மாடுகள் வெளியே வந்தன. ஒல்லியான மாடுகள் கொழுத்த மாடுகளை சாப்பிட்டன, ஆனால் அவை முன்பைப் போலவே மெலிந்திருந்தன! பின்னர் ஏழு நல்ல கதிர்கள் மற்றும் ஏழு ஒல்லியான கதிர்கள் பற்றி கனவு கண்டான். ஒல்லியான கதிர்கள் நல்ல கதிர்களை விழுங்கின. பார்வோன் தனது மந்திரவாதிகளிடம் அவைகளின் அர்த்தம் என்ன என்று கேட்டான், ஆனால் அவர்களுக்குத் தெரியவில்லை. **(ஆதியாகமம் 41: 1-8)**<br>* கனவுகள் எதைக் குறிக்கின்றன என்று குழந்தைகளிடம் கேளுங்கள். தேவன் பார்வோனுக்கு இந்தக் கனவுகளை வரவிட்டிருந்தார். அவரால் மட்டுமே அர்த்தத்தை வழங்க முடியும்.<br>* பார்வோன் யோசேப்பை அழைத்துவரச் சொன்னான். யோசேப்பு சிறையிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு பார்வோனுக்கு முன்பாக நிறுத்தப்பட்டான். கனவுகளின் அர்த்தத்தை விளக்க தேவன் தனக்கு உதவுவார் என்று யோசேப்பு பார்வோனிடம் கூறினான். **(ஆதியாகமம் 41: 14-24)**<br>* கனவுகள் எதைக் குறிக்கின்றன என்பதை தேவன் யோசேப்புக்குக் வெளிப்படுத்தினார். யோசேப்பு பார்வோனிடம் அர்த்தத்தைச் சொன்னான். ஏழு கொழுத்த மாடுகள் மற்றும் ஏழு நல்ல கதிர்கள் - விரைவில் ஏழு ஆண்டுகள் நல்ல அறுவடை கிடைக்கும் என்று பொருள். எல்லோரும் சாப்பிட நிறைய இருக்கும். இருப்பினும், ஏழு ஒல்லியான மாடுகள் மற்றும் ஒல்லியான கதிர்கள் செழுமையான ஏழு வருடங்களுக்குப்பின் ஏழு ஆண்டுகள் பஞ்சம் இருக்கும் என்று பொருள். பஞ்சம் மிகவும் மோசமாக இருக்கும், செழுமையான ஏழு ஆண்டுகளை எல்லோரும் மறந்துவிடுவார்கள் **(ஆதியாகமம் 41: 25- 32)**<br>* செழிப்பான ஆண்டுகளில் உணவு சேகரிக்கவும், பஞ்ச காலங்களில் மக்கள் சாப்பிட அதை சேமிக்கவும் பார்வோன் ஆட்களை நியமிக்க வேண்டும் என்று யோசேப்பு பரிந்துரைத்தான். இந்த ஆலோசனை பார்வோனுக்கு மகிழ்ச்சி அளித்தது. தேவன் யோசேப்புடன் இருக்கிறார் என்பதையும் அவன் ஒரு புத்திசாலி என்பதையும் பார்வோன் அறிந்திருந்தான். அவன் யோசேப்பை எகிப்து தேசத்திற்கு பொறுப்பேற்கச் செய்தான். எகிப்தில், யோசேப்பை விட பார்வோன் மட்டுமே பெரியவன். **(ஆதியாகமம் 41: 33-45)** |
| **கற்றுக்கொள்ளுங்கள்** | முக்கிய வசனத்தை தேவையான இடங்களில் **கற்றுக்கொடுத்து** விளக்குங்கள். **1 கொரிந்தியர் 10: 13 -** ‘தேவன் உண்மையுள்ளவர்’. ‘உண்மையுள்ளவர்’ என்பதன் அர்த்தத்தை மேலே குறிப்பிட்டுள்ளபடி குழந்தைகளுடன் விவாதிக்கவும். |
| **நினைவில்வையுங்கள்** | கதையை மீள்பார்வை செய்வதற்கான வழிமுறையாக பின்வரும் கேள்விகளை குழந்தைகளிடம் கேளுங்கள்.<br>* பார்வோன் யோசேப்பை ஏன் அழைத்தான்?<br>* முதல் கனவில் கண்ட மாடுகளுக்கு என்ன நேர்ந்தது?<br>* கனவுகள் எதைக் குறிக்கின்றன என்பதை யோசேப்பு அறிந்துகொள்ள அவனுக்கு உதவியது யார்?<br>* கனவுகள் எதைக் குறிக்கின்றன?<br>* செழிப்பான ஆண்டுகளில் யோசேப்பின் சிறப்பு வேலை என்ன?<br>* யோசேப்புக்கு தேவன் எப்படி உண்மையுள்ளவராக இருந்தார்? |

பாடங்களுக்கு மதிப்பெண் வழங்குவதில் ஆசிரியர்களுக்கான வழிகாட்டுதல்

நிலை 1 பாடங்கள்:

□ ஒவ்வொரு வாரமும் ஒரு பக்கம் (அல்லது சிறு புத்தகங்களில் இரண்டு) முக்கியமாக ஒரு சிலவற்றில் வண்ணந்தீட்டுதல் மற்றும் சில வார்த்தைகளை நிரப்புதல் ஆகியவை அடங்கும்.

□ ஒவ்வொரு வாரமும் 10 மதிப்பெண்கள் அதிகபட்சம் மாதத்திற்கு 40 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன.

□ நிலை 1 பாடங்களைப் பெறும் குழந்தைகள் நன்றாகப் படிக்க முடியும் என்று எதிர்பார்க்கவில்லைஇ பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் /தலைவர்கள் அவர்களுக்கு உதவ வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

□ ஒரு பதிலுக்கு 2 மதிப்பெண்களையும்இ ஒவ்வொரு பாடத்திற்கும் வண்ணந்தீட்டுதலுக்கு ஸ்ரீ 10 மதிப்பெண்களையும் ஒதுக்குகிறோம்.

நிலை 2 பாடங்கள்:

□ வாரத்திற்கு இரண்டு பக்கங்கள். (4 சிறு புத்தகங்களில்)

□ பாடத்திற்குள்ளேயே கதை உள்ளது. மாணவர்கள் பாடத்திலிருந்து பல்வேறு சொற்களைக் கண்டுபிடிக்க வேண்டும்இ சிலவற்றிற்கு வண்ணந்தீட்ட வேண்டும்இ முக்கிய வசனங்களைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

□ பாடங்கள் முற்றிலும் சரியாக இருக்கும்போது ஒவ்வொரு வாரமும் 20 மதிப்பெண்கள்இ அதிகபட்சம் மாதத்திற்கு 80 மதிப்பெண்கள் ஒதுக்கப்படுகின்றன.

பைபிள்டைம் மதிப்பெண் வழங்கும் முறை

மதிப்பெண் வழங்கும்போது கவனிக்கவேண்டியவை

முதலில் இதைச் செய்யும்படி ஆசிரியர்களைக் கேட்கிறோம்:

□ வ்வொரு பாடத்தையும் சரிபார்த்துஇ பதில்கள் சரியா அல்லது தவறா என்று குறிக்கவும்.

□ அறிவுறுத்தப்பட்டபடி தேவையான புள்ளிகளை வழங்குங்கள்.

□ எப்போதும் மாறுபட்ட நிறத்தில் குறிக்கவும்இ ஒவ்வொரு சரியான பதிலையும் டிக் செய்யவும்.

□ தேவையான இடத்தில் சரியான பதிலை எழுதுங்கள்இ எழுத்துப்பிழை சரிசெய்யவும்இ இருந்தபோதிலும் இதற்காக மதிப்பெண் குறைப்பதில்லை.

□ அரைகுறையான பதில்களுக்கு குறைந்த மதிப்பெண் கொடுங்கள்.

□ மாதத்தில் பெற்ற மொத்த மதிப்பெண்களைக் கூட்டிஇ பின் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் அதை எழுதவும்.

மிகவும் தாராளமாக இருப்பது அவசியம் மற்றும் மாணவர்களை அவர்களின் பைபிள் படிப்புடன் ஊக்குவிக்க முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். இது உதவியாக இருக்கும்இ ஒவ்வொரு மாதமும் ஆசிரியர் மாணவருக்கு ஊக்கமளிக்கும் வார்த்தையை எழுத முடியும்இ மேலும் இது செய்ய பாடத் தாளில் ஒரு இடம் ஒதுக்கப்பட்டிகிறது. நல்ல வண்ணந்தீட்டுதல்இ சுத்தமாக வைத்திருத்தல்இ பெற்ற மதிப்பெண்கள்இ பாடத்தைப் பற்றிய மாணவரின் புரிந்துகொள்ளுதல் போன்றவற்றைப் பற்றி கருத்துகளைக் கூறலாம். கருத்துகளை முடிந்தவரை மாறுபட்டதாக வைக்க முயற்சிக்கிறோம். கேள்விகள்இ அறிக்கைகள்இ ஆய்வுக்கருத்துகள்இ ஊக்கங்கள் போன்றவை அனைத்தையும் பயன்படுத்தி மாறுபட்டதாக வைக்கவும். இதற்கு சிந்தனை தேவைஇ ஆனால் மாணவரின் ஆர்வம் குன்றாமல் வைத்திருப்பது முக்கியம். ஒவ்வொரு மாதமும் அதே அறிக்கை அல்லது கேள்வி மீண்டும் மீண்டும் செய்யப்படுமானால்இ அது அதன் தாக்கத்தை இழந்துவிடும்.

நிலை 1

பொதுவான கருத்துகள்

"ஆமி - நீ இந்தப் பாடங்களைத் தொடங்கியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்இ நீ அவற்றை ரசிக்கிறாய் என்று நம்புகிறேன். உனது வண்ணந்தீட்டுதல் எனக்குப் பிடித்திருக்கிறது. நீ பள்ளிக்குச் செல்கிறாயா? அதைப் பற்றி என்னிடம் செ□ல். கூடிய விரைவில் உனது பதிலுக்காக காத்திருக்கிறேன்."

"நல்லதுஇ ஆண்ட்ரூ. எவ்வளவு அருமையாக வண்ணந்தீட்டியிருக்கிறாய்! வரிகளுக்குள் வண்ணந்தீட்டுவது கடினமாக இருந்ததா? கடைசி பாடத்தில் நீ ஒரு சிறிய வண்ணந்தீட்ட தவறிவிட்டாய்."

ஆவிக்குரிய கருத்துக்கள்

"நல்லதுஇ சாராள். இயேசு அவனுக்கு உதவி செய்தபோது யவீரு எவ்வளவு மகிழ்ச்சியான மனிதனாய் காணப்பட்டான்."

"மிக நல்ல பதில்கள்! இயேசு மரிக்கும் கதை சோகமானதுஇ ஆனால் அவர் மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்பது மகிழ்ச்சியளிக்கும் விஷயம்."

நிலை 2

பொதுவான கருத்துகள்

"மீண்டும் நல்ல பதில்கள்இ யோவன்னா - பள்ளியில் உனது ஆசிரியர் உன் பதில்களைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைகிறார் என்று நான் நம்புகிறேன்!"

"உனது பிறந்த நாள் விரைவில் வரவிருக்கிறது என்று நான் காண்கிறேன்இ கோனர். ஏதாவது சிறப்பாக செய்கிறாயா? நீ என்ன செய்தாலும்இ அது உனக்கு ஒரு சிறந்த நாள்!"

"நீ மிகவும் கடினமாக முயற்சிசெய்திருக்கிறாய். சில சிறிய தவறுகள் உள்ளன. ஒவ்வொரு முறையும் உன் பதில்களைச் சரிபார்க்க மறக்காதே."

ஆவிக்குரிய கருத்துக்கள்

"குழந்தை இயேசு முன்னணையில் இருப்பதை நீ வண்ணந்தீட்டிய விதம் எனக்குப் பிடித்திருக்கிறது. நமக்காக அவரை உலகத்திற்கு அனுப்பியது தேவன் நமக்குச் செய்த நன்மையல்லவா?"

"நீ பயன்படுத்திய வண்ணங்கள் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது! தேவன் சொன்னதை நம்பாததற்காக சகரியா ஒரு விலை கொடுக்க வேண்டியிருந்தது. அவர் பின்னர் ஒருபோதும் தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்கவில்லை."

"சிறந்த பதில்கள். பிலிப்பை பாலைவனத்தில் சந்தித்தவர் மிகவும் மகிழ்ச்சியாக சென்றார். அவர் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கேட்டு விசுவாசித்தார்."

© Bible Educational Services 2023
www.besweb.com